ஆசிகுதி

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம.

வடவேங்கட

நாராயணசதகம்.

மூலமும் - உரையும்.

திவ்வியகவி

நாராயணதாசரருளிச்செய்தது.

இஃது

மயிலம்

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சென்னை

இட்டா

நாராயணசாமிநாயுடு அவர்களது


ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

கஅகூக.

[illegible]

ஸ்ரீமதேராமாநுஜாயநம:



வடவேங்கட

நாராயணசதகம்.

மூலமும்-உரையும்.

---*---

பாயிரம்.

நேரிசைவெண்பா.

நஞ்சுவினைக்காமமுத னமதுயிர்க்காம்
செஞ்செல்வினோர்சதகஞ் செப்பியது-விஞ்சுபுகழ்
நாராயணதாசர் நன்முகநானிலத்தே
பாராயணஞ்செய் பவர்க்கு.

இ-ள். மிகுந்தபுகழுடைய நாராயணதாசரென்பவர்செஞ்சொற் களினாலே திருவாய்மலர்ந்தருளிய நாராயணசதகமென்னும்பாமாலை யானது இந்தப்பூமியினிடத்தில் அன்போடுபாராயணஞ் செய்பவர்க ளாகிய நமக்கு நம்முடைய விஷமாகும் ஊழ்வினையை யழிக்கும் நம் முடைய உயிரைக்காக்கும்-எ-று.

காப்பு.

நேரிசைவெண்பா.

நல்லவேங்கடத்து நாராயணசதகம்
சொல்லவெனக்குத்துணையாமோ-மல்லர்
பணைபானதிண்புயத்தும்பாண்டவர்க்குமுன்னங்
துணையானபாதந்துணை.

இ-ள். அழகியவடக்கின்கணுள்ள திருவேங்கடத்தி லெழுந்தரு ளிய ஸ்ரீமந்நாராயணன் விஷமாக ஓர்சதகமென்னுபாமாலை பாடுந

ற்குப்பலம்பொருந்திய பருத்ததாகிய அழுத்தமுள்ள புயங்களைப்படைத்த பாண்டவர்க்கு முற்காலத்தில் துணையாயிருந்த அவருடைய பாதங்கள் துணையாயிருப்பதுமன்றி என்னுயிர்க்கும் அவைகளே துணையாகும்-எ-று.

நூல்.

கலி-விருத்தம்.

பிரிந்திசை வண்ணம்.

நீர்கொண்டுதண் மலர்கொண்டுநன் னெறிகொண்டுநின் குறிகொண்டுவண் சீர்கொண்டுவத் தனைசெய்துனைச் செறிவார்களென் பெறுவார்களோ பேர்கொண்டதலன்பொறிகொண்டிலன் பெரியோர்களா லருள்கொண்டிலன் நார்கொண்டுகண் டருள்சோதியே நாராயணா நாராயணா.

இ-ள். பரிசுத்தமான தீர்த்தங்களையும் குளிர்ச்சிபொருந்திய புட்பங்களையுங்கொண்டு நன்மார்க்கத்தை யறிந்து தேவரீருடையசொரூபத்தைத்தெரிந்து அழகிய ஞானத்தைப்பொருந்தித்தண்டன் சமர்ப்பித்து உம்மை ஆராதனைசெய்து அடைந்தபேர்களெல்லாம் என்னபலனைப் பெறுவார்களோ அறிகிலேன் நாயினேன் தாசிய நாமமுதலிய பஞ்ச சம்சகாரத்தையும் பாகவதராலே கிருபையுங்கொண்டவனே அல்ல ஆதலால் அன்பு சுரந்து சந்தோஷித்து இரட்சித்தருளவேண்டும் சோதிமயமாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. க

பரகாரியம் பலசெய்துனைப் பணியாமலே பிணியானபின்
விரகாயிருந் தழுதாவதென் வெறியார்குணங் குறியார்களோ
உரகாரிமே லுபகாரியா பொருசாரியா வுலவாரியா
நரகாரியே முரகாரியே நாராயணா நாராயணா.

இ-ள். கொலை களவு காமம் பொய் வஞ்சனை இவைமுதலாகிய அனேக துஷ்டகிருத்தியங்களைச்செய்து தேவரீரைப்பணியாமல் பிணியானது சம்பவித்தபிற்பாடுங் கபடமாயிருந்து அழுததினாலே உண்டாகிய காரியம் ஒன்றுமில்லை ஆதலால் பயித்தியக்காரர் குணங்களை நல்லோர்களே யறிந்து இரட்சிப்பது கடன் அத்தன்மைபோல அடியேனை இரட்சிப்பது கடன் சர்ப்பங்களுக்குப்பகையாகிய கருடவா

கனமீதிலெழுந்தருளி அடியார்களுக்குபகாரமாக வொப்பில்லாதசே வையாத சேவையாய் உலாவி வந்தருளாநின்றஐயனே நரகாசுரனுக்கும் வைரியாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. உ

சிவனீதலம் புயனீதலந் திரனீதலந் திரனீதலா
ததனீதல்விண் ணவரீதன்மா தவரீதலோ டெவரீதலுற
அவனீதலந் தனிலெண்ணினுன் னடியாரடிப் பொடியாகுமோ
நவனீதமுண் கருமேகமே நாராயணா நாராயணா.

இ-ள். சிவனும் பிர்மாவும் இந்திரனும் சந்திரனும் சூரியனும்தேவர்களும் ரிஷிகளும் இவர்களுடனே பின்னும் யாவர்களும் கொடுக்காநின்ற பலன்களையெல்லாம் பூதலத்தில் எண்ணிப் பார்க்குமிடத்தில் தேவரீருடைய வடியார்கள் திருவடித்துகளும் ஒப்பாகமாட்டாது ஆதலால் அவர்களை நினைப்பதேயில்லை கோபாலர்கிரகத்தில் வெண்ணையையுண்டருளும் நீலமேகவண்ணனாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று.

அலசத்தகும் பிணிவந்துநா னலையாமலே யமரர்க்கிடுங்
கலசத்துளோர் துளிநல்கியென் கவியைக்கொளாம் கருணாகரா
குலசக்கரன் சலகேசரன் குலகேசரன் புகழ்சாகரா
நலசக்கரா சலகக்கரா நாராயணா நாராயணா.

இ-ள். தேகமானது வருத்தத்தை யடையும்படியான நோய்வந்து அடியேன் அலையாமலிருக்க தேவர்களுக்குக்கொடுத்தருளாநின்றகலசத்தமிர்தத்திலே ஒருதுளிகடாட்சித்தருளி அடியேனுடையகவிதையைக் கைக்கொள்ளவேணும் கருணைத்திருமேனியனே வச்சிரபாணியுங் கங்காதரனுங்குலசேகராகிய ஆழ்வாரும்தோத்திரம்பண்ணுநின்ற கீர்த்தியாகிய சமுத்திரத்தையும் நல்லசக்கரத்தையும் தாமரைமலரபோன்ற திருநகரங்களையும் உடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணனே.)

எதிரும்பெரும் பிலுபும்பரந் திரையுஞ்செறிந் தெழிலும்பறந்
துதிரந்திரிந் துடலங்கொளுந் துயரந்தெளிந் துணைநம்பவா
மதியங்கிடந் தொளிருஞ்சடா மகுடந்தொறுந் தொனியும்பவா
னதிவந்தெழும் பதபங்கயா நாராயணா நாராயணா.

இ-ள். தேகத்திலே யெதிர்த்துவராநின்ற பெரிதாகியநோய்மிகுந்து இரைப்புநெருங்கி அழகுகுலைந்து உதிரமூர்ந்துகொள்ளாநின்றதுக்கமானது தெளிந்துபோய்த் தேவரீரை அடியேன் நம்பும்படியாகப் பிரசன்னமாகவேண்டுஞ் சந்திரன்வாசமாய்ப்பிரகாசியாநின்றசிவனுடைய சடாமகுடந்தோறும் முழக்கம் நிறைந்திட ஆகாயகங்கையா

னதுவக்கருளாநின்ற திருவடித்தாமரைகளையுடைத்தாகிய ஸ்ரீமந்நா
ராயணனே-எ-று. ௫

எல்லாருமுன் னுதரத்துளே யென்னோடுமெங் குறைகின்றபேர்
அல்லாதுமே றில்லாமையா லனைவர்க்குமே ரருளல்லவே
வல்லாருளார் மாட்டாருளார் வறியாருளார் வாழ்வாருளார்
நல்லாருளார் பொல்லாருளார் நாராயணா நாராயணா.

இ-ள். அடியேனுடைய ஆத்மகோடிகளெல்லாந் தேவரீருடைய
குட்சிக்குள்ளே வாசம்பண்ணுகிறதேயல்லாமல்வேறேயிடமில்லையா
தலால் யாவருக்குஞ் சமானமானகிருபையேயன்றிப் பேதமில்லையே
அத்தன்மையாயிருக்க இதிலே வலியரென்றும்மெலியரென்றும்தாழ்
வினரென்றும் வாழ்வினரென்றும் நல்லவரென்றும் பொல்லாதவரெ
ன்றும் உண்டாகியதென்னமாயமோ ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௬

நீகாசுதா நீதூசுதா நீயாடுதா நீமாடுதா (ன்
போகாதபேர்க்கிடுசோரெனப்புலையர்க்குநெஞ்சுருகச்சொனே
ஆகாதகாரியமென்னிடத் தளவற்றதுண் டவையாய்வையோ
நாகாசலா நாகாலயா நாராயணா நாராயணா.

இ-ள். பணமும் வஸ்திரமும் ஆடும்மாடும் சாதமு மிவைகளை நீங்
கள் கொடுங்களென்றுசொல்லுவதற்கு யோக்கியமில்லாதபேர்களா
கிய மிலேச்சருடையநெஞ்சானது உருகும்படியாய்க் கவிதைபாடித்
தேடிக்கொண்ட பொல்லாதகாரியங்கள் கணக்கில்லாம லடியேனிட
த்தி லிருக்கின்றன அவைகளை ஆராய்ந்துபாராமல் இரட்சிக்கவேண்
டுஞ் சேஷமலையையும் சேஷனாகிய கோவிலையும்பெற்ற ஸ்ரீமந்நா
ராயணனே-எ-று. ௭

அயனெழுத் தளவன்றியே யதிகங்கணப் பொழுதாயினும்
பவனுயிருப் பவரில்லையிப் படிரீதிலப் படியன்றியே (மே
வியனையுனைத் தொழுவார்களன் விதிவெல்வராய்மறைசொல்லு
நயனாரதன் புகழ்சோதியே நாராயணா நாராயணா.

இ-ள். பிரமதேவனானவனெழுதினபிரகாரமேஅல்லாமல் அதிகமா
க்ஷணப்போதாகிலும் இந்தப்பூமியிலேபிரயோசனப்பட்டிருக்கிறவ
ரில்லையென்றாலும் அப்படியல்லவென்றுசந்தோஷமாகத்தேவரீரைத்
தொழுதபேர்களெல்லாமந்தவிதிவசத்தைக்கடந்திருப்பார்களென்று

வேதங்கள் முறையிடுகின்றதேசயத்தோடுங்கூடியநாரதமகாமுனிவர் தோத்திரம்பண்ணுநின்ற சோதிமயமாகிய ஸ்திரீயங்நாராயணனே.

ஓமங்களால் விரதங்களா லுயர்தீர்த்தயாத் திரைகோடியால்
ஏமங்கள்கன் னியரீதலா லெழுபாரையும் சுழல்கின்றதால்
ஆமைம்பலன் கடிகின்றதா லடைபுண்ணியங் கணமேனுநின்
நாமம்புகன் றதுபோலுமே நாராயணா நாராயணா.

இ-ள். ஓமங்களாலேயும் விரதங்களாலேயும் உயர்ச்சிபெற்றகோடி தீர்த்தயாத்திரைகளாலேயுஞ் சுவானங்களுடனே கன்னிகாதானங்களாலேயும் ஏழுபூமியையும் பிரதட்சணம் வந்ததினாலேயும் உண்டாகிய பஞ்சவிந்திரியங்களை நீக்கினதினாலேயும் வராநின்ற புண்ணியங்களெல்லாம் தேவரீருடைய திருநாமத்தை க்ஷணப்போதாகிலுஞ் சொல்லியபுண்ணியத்துக்கு ஒப்பாகமாட்டாது ஸ்ரீமந்நாராயணனே.

பாடேனலோ கவிசிந்துனைப் பணியேனலோ பலகாலெழு
தாடேனலோ பலிபீடமுன் னணுகேனலோ சடகோபமே
சூடேனலோ வலமாகவே சுழலேனலோ கதியென்றுனை
நாடேனலோ கொடியேனலோ நாராயணா நாராயணா.

இ-ள். தேவரீரைக் கவிதைகளாலே பாடினதுமில்லை தண்டன்சமர்ப்பித்ததுமில்லை பலகாலமுமெழுந்து ஆடினதுமில்லை பலிபீடத்தின்முன்னேவந்ததுமில்லை சடகோபத்தை முடியிலே சூடினதுமில்லை வலமாகச் சூழ்ந்ததுமில்லைகதியொன்றுநினைத்ததுமில்லை இத்தன்மையான பாவியானவன் கடைத்தேறமார்க்கமுளதோ ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௰

அலகைக்கெலா மடிமூலநா னருளுக்கெலா மடிமூலநீ
பிறருக்கெலாம் பெறுவித்ததும் பெறுவிப்பதும்பிணைதட்டிலே
உறவைக்கிலென் னுயிர்காவலுக் கொவ்வாதுவா துரைசெய்வனே
நறவத்துழா யணிமார்பனே நாராயணா நாராயணா.

இ-ள். லோகங்களுக்கெல்லாம் அடிவேராகியிருப்பது யானேயன்றிவேறில்லைஅயலார்களுக்குநீர்செய்தபலனையும்இனிச்செய்கின்றபல

ணையுந் தராசினுடைய தட்டுகளிலேபொருந்தவைத்தால் என்னுடை ய வுயிரை இரட்சிக்கின்றபவனுக்கு அவை சரியாகமாட்டாது ஆத லால் வாதுபேசுவதில்லை தேன்பொருந்துந் திருத்துளவந்தரித்த திரு மார்பையுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௰௪

பசியாதமந் திரமேவரும் மழியாதமந் திரமந்தகன்
விசியாதமந் திரநோயிலே விழியாதமந் திரநெஞ்சிலே
முசியாதமந் திரமோதுவர் முதலானமந் திரமொன்றிலே
நசியாதமந் திரமோநமோ நாராயணா நாராயணா

இ-ள். பசியையெழுப்பாதது எவர்களாலே பழிப்பில்லாதது யம ன் பாசத்திற்கட்டுப்படாதது நோயைப்பார்க்காதுநெஞ்சிலேகெடுத லில்லாதது ஓதுவார்க்கெல்லாம் முதன்மையானது ஒன்றினாலேயும் நாசமில்லாதது அவையாதெனில் ஓம் நமோநாராயணாவென்னுந்தி ருநாமமந்திரமேயல்லதுவேறில்லை-எ-று. ௰௫

அபராதமா கியபல்சரக் கடபாதவோ டமதேற்றியே
விபரீதமோயலையிற்குளே விடநின்றதூழ்வினையென்செய்வேன்
இபராசனைக் கரையேற்றுநீ யெனையேற்றலிங் கரிதல்லவே
நபராசனே சுபராசனே நாராயணா நாராயணா.

இ-ள். அபராதங்களாகிய பலசரக்குகளை நெருக்கமாகத் தேகமெ ன்னும் ஓரிடத்திலேயேற்றி விபரீதநோயாகிய கடலுக்குள்ளே ஊழ் வினையானது தள்ளிநின்றது என்னசெய்வேன் கஜேந்திரனைக் கரை யேற்றின தேவரீர் அடியேனைக்கரையேற்றுதற்கு இவ்விடத்தில் அரி தல்லவே தேவர்களுக்குஞ் சுபங்களுக்கும் கர்த்தாவாகிய ஸ்ரீமந்நா ராயணனே-எ-று. ௧௬

வான்சொல்லுமே புவிசொல்லுமே மறைசொல்லுமே நிறைசே டன்வாய், தான்சொல்லுமே முனிவார்பெருஞ்சபைசொல்லுமேசசி சொல்லுமே தேன்சொல்லிபங் கிறைசொல்லுமே திசைசொல்லுமே திசையாமலே, நான்சொல்லவே குலமாவனோநாராயணா நாராயணா.

இ-ள். தேவர்களுடைய நாவும் உலகத்தோருடைய நாவும் வேத ங்களுடையநாவும் கல்விநிறைந்த ஆதிசேடனுடைய இரண்டாயிர

ம் நாவும்பெரிதாகிய சபையோகூடிய முனிவருடையநாவும் சந்தி
ன் முதலாகியநவக்கிரகங்களுடையநாவும் தேன்போலுஞ்சொல்லினை
யுடைய பார்வதிபாகத்திலிருக்கும் ருத்திரனுடையநாவுந்திக்குப்பால
கருடையநாவும் தோத்தரிக்கும்படியான தேவரீருடைய கீர்த்தியை
மாறுபாடாமல் அடியேனுடைய நாவினாலே சொல்வதற்குக்காரண
மாவனே சொல்லும் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. கச

சுருக்காமருந் துடற்கூறியே சுழற்றுமருந் தழற்றீயிலே யில்
உருக்காமருந்துலர்த்துண்டையாவுருட்டாமருந்துழக்கெண்ணை
சுருக்காமருந் திகற்கையிலே கசக்காமருந் திருக்கல்லிலே
நருக்காமவந் திருக்கின்றதே நாராயணா நாராயணா

(இ-ள்.) வெளியிலேசுருங்காதது உடலிலேயூரினாற்சுழற்றாதது அ
க்கினியிலேயுருகாதது உண்டையாகவுருட்டி வுலாத்தாதது உழக்கெ
ண்ணெயிலேகருக்காதது வலியகைகளிலேகசக்காதது இரண்டு கல்
லிலெநெருக்காதது இத்தன்மைக்கொண்டமருந்தானது இருக்கின்ற
து அதுயாதெனில் அஷ்டாக்ஷரமேயன்றில்லை ஸ்ரீமந்நாராயணனே
எ-று. கரு

தகவாயுனைப் புகழாமலே சலமேதொடுத்திகல்பேசுவார்
முகவாயிலே புழுவீழுமே மினையந்தகன் கிளைமோதுமே
ககவாகனா மிகுமோகனா கனகங்களே பரமார்பெலாம்
நகவாளினா லரிசீயமே நாராயணா நாராயணா

(இ-ள்) மேன்மையாகத்தேவரீரைத் தோத்திரஞ்செய்யாமல்கோப
மே பெரும்படியாய்பகையை இழிவுபேசுவாருடைய முகத்தோடுங் கூ
டியவாய்களிலே புழுக்கள் சொரிவதுமல்லாமல் யெதிர்க்காநின்ற ய
மதூதர் மோதுவார்கள் கருடவாகனனே இரணியனுடையமார்பையு
ம் அவனதுசேனைகளையும் நகமென்னும்மாயுதத்தினாலே சங்கரியாநி
ன்றநரசிங்கரூபமாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. கசு

தலமேழையும் னடபோதினுஞ் சலமொவிடா தகிலாண்டநற
பலம்யாவுமென் மனைசேரினும் பசைபோதிடா திசைமாதரார்
குலம்யாவுமின் பமதீயினுங் குறுகாதுமால் பெறுகாயுமே
நலமேவுமே பொலமேவுவே நாராயணா நாராயணா

(இ-ள்) ஏழுலோகத்தையும் அறியும்படியாய்ப்போர்பண்ணினாலு ம்கோபங்களடங்குவதில்லை அகிலாண்டங்களிலே பிராநின்ற நன்மை யான பாக்கியங்களெல்லாம் என்வீட்டிலேநிறைந்தாலும் ஆசைக ளொழிவதில்லை பெண்களென்றிசைந்த சாதிகளெல்லாம் இன்பங் கொடுத்தாலும் காமங்கள் நீங்குவதில்லை இத்தன்மையைக்கொண்ட என்னுடைய தேகமானது எத்தன்மையைப்பொறுமோ அறிகிலேன் பிரகாசியாநின்ற மேகவண்ணனாகிய ஸ்ரீமன்நாராயணனே-எ-று.

பண்டிட்டதா மரையுந்தியிற் படிவார்நின் கடியானெனத்(தோ
தொண்டிட்டுநின்றெழில்கொள்வதோ துயமத்யலேயடைவிப்ப
கொண்டிட்டறன்புகழ்நிற்கவேகுறையாளடைப்புகழ்கின்றவாய்
நண்டிட்டபாழ் வளையொக்குமே நாராயணா நாராயணா

(இ-ள்) பழமையாயிராநின்றதேவரீருடையநாபிக்கமலத்திலேபொ ருந்திய வுயிர்களெல்லாம் அன்பராகும்படிஅடிமைகொண்டுகயிங்கரி யத்தைக்கொள்ளவேண்டுமேயல்லாமல் துக்கங்களடையச்செய்யலா மோ வேதங்கள்கொண்டிராநின்ற உம்முடையகீர்த்தியைவிட்டுக் கு ரைச்சலானதெய்வங்களைப்புகழாநின்றவாய்களெல்லாம் நண்டிட்டுத் தோண்டிவிட்ட [பாழ்வளைக்கு ஒப்பாயதேயன்றிப் பிரயோசனமில் லைஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௧௮

லகையானவன் பிணிசெய்ததோர் பதினாயிரம்பிழையுண்டுநான்
வகையாநினக் குறைசெய்கிலேன் வருநோயுநின் னருளாதலால்
மிகையானபின் முறையிட்டனென் விடுவித்திட்டாய் விளையாடினால்
நகையார்களோ குறையார்களோ நாராயணா நாராயணா

(இ-ள்) அடியேனுடையதேகத்திலேபகையாகியபொல்லாதபிணி யானது செய்யாநின்றஉபத்திரங்கள் பதினாயிரமுண்டுஇன்னவிதமெ ன்று தேவரீருக்குவிண்ணப்பஞ்செய்கிலேன் வாராநின்றஇந்தநோயா னது உமதுகிருபையேயல்லாமல் வேறில்லை ஆதலால்துன்பம்வந்தபி ற்பாடு முறையமிட்டேன் இதைநீக்கிவிடாமல்விளையாடினால் உலகத் தார்நகைப்பதுமல்லாமல் இகழ்ச்சியும்பண்ணுவார்கள் ஸ்ரீமன்நாரா யணனே-எ-று. ௧௯

குப்புத்தகன் றுடனேகெலாங் குழுவாகவோர் குழலூதவே
மாப்புக்கொளுந் தொனிகாதில்வ் வழியேபுகுட் களுமுண்ணவே

குப்புக்குமோர் தயிர்வெண்ணெய்பால் சொரிகைக்குமவ் விடநங்கை
மார், நட்புக்குமா டியகண்ணனே நாராயணா நாராயணா

இ-ள் துள்ளினகன்றுகளுடனே பசுக்களெல்லாங்குவிந்திருக்கவும் ஆகாயவழியிலேசெல்லாநின்ற பட்சிகளுடையகாதுகளிலேகேட்கவும்ஒப்பிலாதவேணுகுழலூதித்தொனியாகத்தப்புகொட்டினதுமல்லாமல் அங்கிருக்கும்இடையப்பெண்கள்பொழியாநின்ற நெய்க்கும்மோருக்கும்தயிருக்கும் வெண்ணெய்க்கும்பாலுக்கும் மவர்களுடைய நட்பினுக்கும் நடனஞ்செய்தகண்ணனாகிய ஸ்ரீமந்நாராயணனே எ-று.

தாயற்றபேர் தாயாகுவாய் தமரற்றபேர் தமராகுவாம்
சேயற்றபேர் சேயாகுவாய் செயலற்றபேர் செயலாகுவாய்
வாயற்றபேர் வாயாகுவாய் மலைபோலுநோய்க் குனேநம்பினல்
நாயற்றுமுன் பனிநிற்குமோ நாராயணா நாராயணா

இ-ள். தாயில்லாபேர்களுக்குத்தாயாகவும் சுற்றமில்லாதபேர்களுக்குச்சுற்றமாகவும் பிள்ளையில்லாதபேர்களுக்குப்பிள்ளையாகவும் உதவியில்லாதபேர்களுக்கு உதவியாகவும் வாக்கில்லாதபேர்களுக்குவாக்காகவும் அருளாநின்றதேவரீரை மலைபோலுங்கொண்டநோய்க்குநம்பினல் சூரியன்முன்னே பனிநீங்குமாறுபோல் நீங்குமேயன்றி நிற்குமோ ஸ்ரீமந்நாராயணா எ-று. ௨௧

மந்தன்புதன் குருவெள்ளிசேர் மதிராகுகே தரிநாபொறுந்
தந்தம்பெலா விடமேவினுஞ் சகலேசநின் சரணண்டினல்
எந்தம்பிரா னிவனென்றுகொண் டேகாதசப் பலனீவரோ
நந்தன்சுதா நம்பும்பவா நாராயணா நாராயணா

இ-ள். சனி புதன் குருசுக்கிரன்செவ்வாய்சந்திரன் ராகுகேதுசூரியன் இவர்கள்நாள்தோறும் தங்கள்தங்கள் பொல்லாதராசிகளிலேயிருந்தாலும் சகலத்துக்கும் ஈசனேதேவரீருடையதிருவடியைஅடைந்தால் எங்களுடையதம்பிரானிவனேயென்று அன்புகொண்டு பதினோராமிடத்துப்பலனைக்கொடுப்பார்கள் நந்தகோபனுடைய திருக்குமாரா நாயினேன்நம்பாநின்ற பரமபதத்தையுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௨௨

ஆற்றுமையொன்றமையாமையொன்றறியாமையொன் றருளாமையென் றேற்றமையொன்றிசையாமையொன் றின்னமையென் றிருதாளையும்போற்றுமையொன்றடியாருடன்பொலியாமையொன்றுமெய்யி நாற்றுய்விளைந் திடலாகுமோ நாராயணா நாராயணா

இ-ள். அயலார்வாழ்வைக்கண்டு அவதிப்படுதல் பொறுமைநீங்குதல் பேதமைவளர்தல் ஈதன்மறுத்தல் முயற்சியடைதல் இங்கிதமழித்தல் பொருமைமிகுதல் திருவடிப்புகழ்விடுதல் அடியாருடக்கூடாதிருத்தல் இவைகளெல்லாம் நாயினுடைய ஒருதேகத்துக்குள்ளேநாற்றுகள்போலே உளரலாமோ ஸ்ரீமந்நாராயணனே. எ-று ௨௩

தன்மைக்குநீ யடியேனுடைச் சலிகைக்குநீபொலிகைக்குநீ
மென்மைக்குநீவன்மைக்குநீ மிகுதிக்குநீ தகுதிக்குநீ
புன்மைக்குநீ புலமைக்குநீ பொறுமைக்குநீ மறுமைக்குநீ
நன்மைக்குநீ தின்மைக்குநீ நாராயணா நாராயணா

இ-ள். அடியேனுடைய ஒழுக்கத்துக்கும் சலிகைக்கும் பிரகாசத்துக்கும் மெலிமைக்கும் வலிமைக்கும் குற்றத்திற்கும் முயற்சிக்கும் பொல்லாங்குக்கும் அறிவுக்கும் பொறுமைக்கும் மோட்சத்துக்கும் நன்மைக்கும்தின்மைக்கும் சகலத்துக்கும் தேவரீரேயல்லாமல் வேறில்லை ஸ்ரீமந்நாராயணா. எ-று ௨௪

வேட்பித்ததுன் பெருநெஞ்சமே வியபித்ததுன் விளையாடலே
கேட்பித்ததுன் பலநூல்களே கிளர்ப்பித்ததுன் பதிவாசமே
பேட்பித்ததுன் கனசத்திலேபிழைப்பித்ததெம் பிணிப்பித்தநாள்
நாட்பிச்சையுந்தரவேண்டுமே நாராயணா நாராயணா

இ-ள். உமதுதிருவுள்ளமே எனக்குஇன்பந்தந்தது உமதுதிருவிளையாடலே எனக்குச்சந்தோஷஞ்செய்வித்தது உமதுதிவ்விய பிரபந்த முதலாகிய புராணங்களையெனக்குக்கேட்கப்பண்ணியது உமதுதிருப்பதிகளே எனக்குவாசத்தையுண்டாக்கியது உமதுகனம்பொருந்திய வலிமையே எனக்கு ஆதரவுபுரிந்தது ஆதலாலடியேனுடைய குற்றத்தைநவெவ்வியதாகியநோயையும்நீக்கிவிட்டு இனிவாழ்நாளாகிய பிச்சையுந்தரவேண்டும் ஸ்ரீமந்நாராயணனே. எ-று ௨௫

பூரிக்குநின் கொடியென்னவே புளகிக்குநின் சனமென்னவே
சரிக்குநின் சபையென்னவே பிரதிக்குநின்புகழென்னவே

ஆரிக்குணம் பெருதேவதா னடியாருளத் தானந்தமே
நாரிக்குவில் லொடியச்செய்தாய் நாராயணா நாராயணா

இ-ள். உமதுகருடக்கொடியேயென்றால்தேகம்பூரிக்கும்உமது அடியார்களேயேயென்றால் எனதுமயிர்புளகிக்கும் உமதுசபையேயென்றால் எனதுகண்களிலே ஆனந்தபாஷ்பம் பெருகும் உமதுபுகழேயென்றால்என்மனதுரம்மிக்கும்ஆதலாலித்தன்மையானகுணத்தேவர்களிளே எவர்கள்தான் பெற்றார்கள் பாகவதருடைய இருதயத்தில் ஆனந்தமானவனே ஜானகிக்காகருத்திரன்வில்லை ஒடியச்செய்தருளா நின்ற ஸ்ரீமந்நாராயணனே-எ-று. உசு

தேன்பாடிதா வனயாலையுந் திருவாழிசங் கமுதேந்தியே
தான்பாடிநா ரதனுடுமுன் சபைமானிடக் கதிதூரமே
வான்பாடிபுட் புயலென்றுதான் லருமென்றுவா டுவதென்னே
நான்பாடினால் வரவேண்டுமோ நாராயணா நாராயணா

(இ-ள்) நாரதமகாமுனியானவர் பாடியாடாநின்ற தேவரிருடைய சபையானது மானிடர்களுக்கு அதிகதூரமாகவிருக்கும் ஆதலால் வரக்கூடாது வானம்பாடியென்னும்பட்டியானதுநீருண்டமேகங்களென்றைக்குவருமோவென்று மனதுவட்டங்கொண்டதுபோல அடியேன்வருந்திப்பாடினால் அத்தன்மைபோலேவந்து இரட்சித்தருளவேண்டும் வண்டுகள் பாடித்தாவாநின்ற ஸ்ரீமன்நாராணா-எ-று. உஎ

மானோயுநின் மருளூற்றநாள் வாய்நீர்மருந் தாயங்ஙனே
தானோடுநின் னருளரவுநாள் சஞ்சீவியைத் தனியேறுமே
தானாயண் டினபேர்கடா மடியாருளந் தானந்தமே
நானேதவா ஞானேதயா நாராயணா நாராயணா

(இ-ள்) மகத்தாகிய நோய்களெல்லாந்தேவரீருடைய கிருபையைப்பெற்ற நாளையிலே உமிழ்நீரோமருந்தாகி அங்ஙனே ஓடிப்போகும்உமதுகருணையில்லாத காலத்திலே சஞ்சீவியைகொடுத்தாலுந் தள்ளிவிட்டு அதிகமாகுதலா லிதையறிந்தபேர்கள் சுகத்தைப்பெறுவார்கள் அடியார்கள் இருதயத்தில ஆனநதமானவனேநாயினேன்தோத்திரம்பண்ணினால் ஞானஉதயஞ்செய்தருளவேண்டும்ஸ்ரீமன்நாராயணனே-எ-று. உஅ

ஈசன்பரன் பிரமன்பிதா விறைவண்டுவண் டுறைதண்டுழாய்
வாசன்சரா சரனென்றுநின் வழியன்பர்வாழ் பதிதன்னிலே
தீசங்கடம் பிணிதாழுமே சிறைசண்டவஞ்சனைவீழுமே
நாசங்கடந் துயிர்வாழுமே நாராயணா நாராயணா

(இ-ள்) ருத்திரனுக்கும் பரமனேயென்றும் பிரமனுக்குதந்தையென்றும் கர்த்தனேயென்றும் விஷ்ணுவேயென்றும் வண்டுகளுடனே குளிர்ச்சிபொருந்தாநின்ற திருத்துழாவினிடத்திடத்திலே வாசனேயென்றுஞ் சராசரங்களானவனேயென்றுந் தேவரீரைத்தோத்திரம் பண்ணும்வழிபடாநின்றஅடியார்கள்வாழ்ந்தருளுந்தலங்களிலேபொல்லாத சங்கடங்களும்நோய்களும் சிறைகளும்போர்களும்வஞ்சனைகளும்இவைமுதலாகியகுற்றங்கள்யாவும் நீங்கிமற்றவுயிர்களெல்லாம்வாழ்ந்திருக்கும் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. உகூ

ஆபாதவா யுனைவையுமே யடியாருடன் படைபண்ணுமே
மாபாவநூல் பவகற்குமே மறைபண்ணுவா தியர்தம்மினும்
ஓபாவியே னிவைநின்முனே யுரைசெய்தனன் விரைசெய்தபூ
நாபாபரா பரனேயரி நாராயணா நாராயணா

(இ-ள்) அபத்தம்நிறைந்த என்னுடையவாயானது தேவரீரைவைதுக்கொண்டேயிருக்கும்அடியார்களுடன்போர்பண்ணிக்கொண்டேயிருக்கும் மகத்தாகியபாபசாஸ்திரங்களையே கற்கும் ஆதலால் வேதத்திலே சொல்லாநின்ற விரோதிகளைப்பார்க்கிலும் அதிகரித்திராநின்ற விரோதியாகிய நாயினேன் தேவரிச்சன்னிதானத்திலேவிண்ணப்பஞ்செய்துவிட்டேன் உமதுசித்தம் என்பாக்கியம் வாசனைசேர்ந்த நாபிக்கமலம் பொருந்தாநின்ற பராபரனென்னும் அரியாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௩௰

காற்பாலிவிற் கடவாதவன் கலிகாலமே திரையாடிடுந்
தோற்பாவைநா னதுமெச்சவே தொடுசூத்திரத் துறைகாரனீ
மேற்பாவபுண் ணியமானநல் வினைதீவினைக்கெவராகுவர்
நாற்பாலினுக் கொருமூலமே நாராயணா நாராயணா.

(இ-ள்)கடலிலே உதித்துவராநின்ற சூரியனாலே அறியும்படியான காலப்பிரமாணத்தோடுங்கூடியகலிகாலமேதிரையாகவும் ஆடாநின்ற

தோற்பதுமையும்யானுகவும்மனதுமெச்சும்படியாகத் தொடுக்காநின்றகூந்திரத்துறைக்காரா தேவரீரானல்மேலேவாராநின்றபாபபுண்ணியஙகளுக்குஅதிகாரிகள் எவராகுவார்கள் இந்தநியாயத்தை தெரியப்படுத்தவேண்டும் பறப்பன ஊர்வனநடப்பன இருப்பனவாகிய நான்குவிதசமானமான ஆதரவு தேவரீரேயன்றிவேறில்லை ஸ்ரீமந்நாராயணனே. எ-று ௫௧

இரையாலெழுஞ் சுவரானநா ளிருசானுடம் பிடியாமலே
கரையாமலே தகராமலே கழலாமலே பிடியாமலே
திரையாமலே வினைமுடிகண் டிபவாமலே வகையென்னதா
னரையாதசோ றிடுமையனே நாராயணு நாராயணு

இ-ள். ஆகாசத்திலே வளராநின்றஎண்சானுடம்பாகியசுவரானது கரைந்துபோகாமலும் இடிந்துபோகாமலும் அதிர்ந்துபோகாமலும் வெந்துபோகாமலும் திரைந்துபோகாமலும் வினையினலே யிரந்துபோய் மறுபடியும்பிறந்து விழிதிறவாமலும் இருக்கும்வகையாதெனில் நரைதிரைமூப்பில்லாத அமுதத்தைக்கொடுத்தருளவேண்டுமென்னையனுகிய ஸ்ரீமந்நாராயணனே. எ-று ௫௨

புற்கொண்டுவாள் பசுவாரொடார் புலிபாழ்கிணற் றிரைவீழினும்
கற்கொண்டுவா தடிகொண்டுவா கடிதென்பரப் படுபாவிநான்
ஏற்கொண்டுநோய்க் கெவராகுவா ரினிநீயலா திலையெட்டியும்
கற்கொண்டலால் வளர்க்கின்றதோ நாராயணு நாராயணு.

இ-ள். புல்லையுண்டுவாழாநின்ற பசுவானது கிணற்றிலேவிழுந்தால்கண்டவர்கள்யாரேனும்எடுத்துவிடுவார்கள் புலியானதுவிழுந்ததானல் சீக்கிரமாக கற்களும்தடிகளுங்கொண்டுகொல்லுவார்கள் அத்தன்மைபோலப்படுபாவியான என்னுடையதேகத்திலேகொண்டநோயைத்தீர்க்க எவரிருக்கிறார்கள் இனிதேவரீரையன்றிவேறில்லைமழையினலே எட்டிச்செடியும்வளர்வதுபோல உம்முடைய கிருபையால் அடியேனைவளரவேண்டும் ஸ்ரீமந்நாராயணனே. எ-று ௫௩

அரபன்கையா லபயம்பெறு ரயலாலுமன் னரையண்டினல்
விரசென்றுவந் திடமீவர்நீ வினவாதசீ விகளண்டினல்
வரசங்கரா தியரஞ்சுவார் வருகென்னமேல் வகையென்னதான்
நரசிங்கனே முரபங்கனே நாராயணு நாராயணு.

இ-ள் தாங்கள்நம்பியிருக்கும்அரசனாலே பிரயோசனமில்லையென்றுமறுமன்னரிடத்திலேசேர்ந்தால் சந்தோஷப்பட்டு எதிரேவந்து இடங்கொடுத்து இரட்சிப்பார்கள் அத்தன்மையாகத் தேவரீர்நம்பினபேர்கள் யாவரேனும் உம்மைவினவாமல் வெறுத்துப்பக்கத்திலேனின்றால் முக்கியமானசங்கரன்முதலாகிய தேவதைகளாலும் இரட்சிக்கப்படுவார்கள் ஆதலால்கதிவேறில்லைஅடியேனைவாவென்றழைக்க வகைஇயன்னவெண்ணியிருக்கிரீரோதெரியாது நரசிங்கனே முராகாசுரனைக்கொன்ற ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௩௪

கோட்சொல்லுவேன் வகைசொல்லுவேன் குறைசொல்லுவேன் முறைசொல்லுவேன் கீட்சொல்லுவேன்மிகைசொல்லுவேன்கிலிசொல்லுவேன் வலிசொல்லுவேன் சூட்சொல்லுவே யனூழிநாள்சொலவேண்டினுஞ்சிறிதுன்னையோர் நாட்சொல்லவெள் ளறிகின்றிலேன் நாராயணா நாராயணா.

(இ-ள்) பிரமகற்பபரியந்தம் அடியேனுடைய நாவானதுகோள்களும் வகைகளும் குறைகளும் முறைகளும்கீழ்மைகளும் குற்றங்களும் பயங்களும்வலிமைகளும் வஞ்சனைகளும் இவைகளைசொல்லுமேயன்றிகொஞ்சமாகிலும் தேவரீர்நாமத்தை ஒருநாளையிலேயுஞ் சொல்லும்படியாயறிகதேனில்லை ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௩௫

ஆளாகிகின் னிருநாலெழுத் தரியாதநா ளறிவார்களைக்
கேளாதநாள் செவியூரவே கிடையாதநா ளதிலாசையே
மூளாதநா ணிலமீதுதான் முதனாளிலங் கெழுதாதநாள்
நாளாகுமே வாளாயுதா நாராயணா நாராயணா.

(இ-ள்) ஆசாரியனுடைய திருவடிகளுக்கு ஆளாகித்தேவருடையதிருமந்திரத்தை அறியாதநாளும் தெரிந்தபாகவதரைக் கேளாதநாளும் செவிகளிலே யூரும்படியாய்ப் பொருந்தாதநாளும் அதிலேஆசையானது பெருகாதநாளும் அஞ்சாவதுவயதில் முதல்நாளையிலே பள்ளிக்கூடத்தில் அரியென்று நிலவெழுத்தாகிலும் எழுதிவையாதநாளும் பலநல்ல நாளாகுமோ வாளாயுதத்தையுடைய ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௩௬

வீட்டுக்குளே துணையாவதும் வெளியிற்குளே துணையாவதும்
கூட்டுக்குளே துணையாவதும் குன்றுக்குளே துணையாவதும்

காட்டுக்குளே துணையாவதுங் கடலுக்குளே துணையாவதும்
நாட்டுக்குளே துணையாவதும் நாராயணா நாராயணா.

இ-ள். வீட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும் வெளியினுக்குள்ளே துணையாயிருப்பவனும் சந்திரனுக்குள்ளே துணையாயிருப்பவனும் மலையினுக்குள்ளே துணையாயிருப்பவனும் காட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும் கடலினுக்குள்ளே துணையாயிருப்பவனும் நாட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும் நீயேயன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணா-எ-று. ௨௭

வாய்க்கின்றதேன் பகையுண்ணலா மணக்கின்றசாந் தரையுண்ணலாங்
காய்க்கின்றமா வெறியுண்ணலாங் கரக்கின்றவர்க் கட்டுண்ணலாந்
தோய்க்கின்றபால் குடையுண்ணலாஞ் சுவைகெட்டமா னிடவாயிலா
நாய்க்கித்தவா தனையேனையா நாராயணா நாராயணா.

இ-ள். தேன்கூண்டினுக்குப் பகைத்தலும் சந்தனக்கட்டையினுக்குத்தேய்த்தலும் பழுத்தமரத்தினுக்குக் கல்லெறிதலும் கறக்கும் பசுவினுக்குக் கயிறணைத்தலும் தோய்த்ததயிரினுக்கு மத்தாற்குடைதலும் இவைகளுக்கு இந்தஉபத்திரமுண்டாகில் பிறருக் குபகாரமகும் உரிசையும் வாலுமில்லாத மானிடமென்னும் நாயினுக்கு இந்த வாதனையைக்கொடுத்தீரே இதனாலே உமக்கென்ன பிரயோசனமுண்டு தெரியச்சொல்லும் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௨௮

தும்பிக்கைபா யுனைமைவர்முன் றுகிலோடிவா டியநங்கையும்
தம்பிக்கையா மகயோகருந் தானிற்கவே சதுர்வேதியன்
கம்பிக்கையா லரனுக்குநீ கனியையுமிட் டிணியையமேன்
நம்பிக்கையா கியதெய்வமே நாராயணா நாராயணா.

இ-ள். கஜேந்திரனையும் பாண்டவரையும் வஸ்த்திரம் நீங்குமென்றுவாடின துரோபதையையும் ஸ்தம்பிதமாயிருந்து தவம்பண்ணுகின்றமகத்தாகிய யோகிகளையும் இரட்சித்த திருக்கட்டும் நான்குவேதத்தையுமுடைத்தாகிய பிரமனுடைய சிரத்தைக்கிள்ளின சிவனுக்கும பிச்சையிட்டுச் சாபத்தைத்தீர்த்தபிற்பாடும் இனிபரத்துவம் வேறேயென்று ஐயப்படலாமோ நம்பிக்கையானதெய்வம்நீயேயன்றி வேறில்லை ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௨௯

பாலாவதோ தேனாவதோ பழமாவதோ பாகாவதோ
மேலானசர்க் கரையாவதோ விரையாருநல் முதலாவதோ

கோலாகலப் பிணிதீரவே குளியங்களோ வனமூலியோ
நாலாவதோ நின்பேர்சொலாய் நாராயணா நாராயணா.

இ-ள். அடியேனுடையதேகத்திலே கோலாகாலஞ் செய்யாநின்ற நோயைத்தீர்க்கும்படியான தேவரீருடைய திருநாமமானது பாலாகியதோ தேனாகியதோ பழமாகியதோ பாலாகியதோ மேலாகியசருக்கரையாகியதோ வாசனைசேர்ந்தநல்லமிர்தமாகியதோ வனமூலிகையாகியதோ இவையல்லாமல் மணிமந்திரம்அவிழ்தம்இவைமூன்றுக்கு மேலாகியதோ என்னென்றுசொல்லுவோம் ஸ்ரீமந்நாராயணா-எ-று.

பூவுக்குநல் லதுசொல்லவோ பொறிசீதளப் புதுவாசமே
தேவுக்குநல் லதுசொல்லவோ செவியார்முனே யெதிர்நிற்பதே
ஆவுக்குநல் லதுசொல்லவோ வதுசாதுவா யமுதீவதே
நாவுக்குநல் லதுசொல்லவோ நாராயணா நாராயணா.

இ-ள். புட்பங்களுக்குள்ளே நல்லது சொல்லவேண்டுமானால் காந்தியுங்குளிர்ச்சியும் புதியவாசனையும் வுண்டாகிய புட்பமேயல்லாமல் வேறில்லை தெய்வங்களுக்குள்ளே நல்லது சொல்லவேண்டுமானால் முறையத்தைக் காதிலேகேட்டுமுன்னமே அடியார்களுக்குப்பிரசன்னமாகிய தெய்வமேயன்றிவேறில்லை பசுக்களுக்குள்ளேநல்லது சொல்லவேண்டுமானால் அதுவெகு சாதுவாயமுதத்தைக் கொடுக்கும் பசுவேயன்றிவேறில்லை நாவுகளுக்குள்ளே நல்லது சொல்லவேண்டுமானால் தேவரீருடைய திருநாமத்தைச்சொல்லிய நாவேயன்றி வேறில்லை ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௨௰

ஆனந்தமா யழுவார்முனே மலர்சூடிய தொழுவார்முனே
மோனந்தனிற் கரைவார்முனே முகிலென்னவே புகள்வார்முனே
தானந்தவம் புரிவார்முனே சரணென்றுனை யடைவார்முனே
நானென்செய்கே னிவையொன்றிலே நாராயணா நாராயணா.

இ-ள். தேவரீருடைய திருவடியைநினைத்து ஆனந்தப்புட்பங்களைக் கண்களிலே பாருகுவார்களுக்குமுன்னே புட்பங்களை யலங்காரஞ் செய்து தண்டன்சமர்ப்பிப்பார்களுக்கு முன்னே மௌனத்தியானத்திலே உள்ளங் கரைந்திடுவார்களுக்குமுன்னே பசுங்கொண்டலே யென்று புகழ்ந்திடுவார்களுக்குமுன்னே தானங்களுந்தவங்களும்செய்திடுவார்களுக்குமுன்னே சரணாகதிசெய்திடுவார்களுக்கு முன்னமே

அடியேன் இவைகளிலே ஒன்றாகிலுஞ் செய்யமாட்டுவனோ ஸ்ரீமந் நாராயணனே-எ-று- ௬௧

செரிக்கின்றவூ ணுகர்வேனலேன் சிரிக்கின்றகா ரிசமேசெய்வேன்
கரிக்கின்றகண் படையேன்வெறுங் கழப்பன்கொடுங் கடுவஞ்சகன்
பரிக்கின்றநின் னடியாரொடும் பழகேனலேன் படர்வந்தபின்
நரிக்கின்றனே னினியென்செய்வே நாராயணாநாராயணா,

இ-ள். சீரணமாகும்படியான ஆகாரத்தைக் கொள்ளாமல் நகைக்கும்படியான காரியமேசெய்து தெரிசனஅபேட்சையான கண்ணையும்படையாமல் அன்பைப்பரிக்காநின்ற அடியாருடனேயுங்கூடாமல் விருதாவாகியகழப்பனாகவும் பொல்லாதவிஷம்போலும் வஞ்சகனாக வுமுத்தரித்துதுன்பம் வந்தபிற்பாடு அவதியைக்கொள்ளாநின்றநாயினேனினியென்செய்வேன் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௬௨

ஆதாரதே வதையென்பனோ வடிவேனையா ளரசென்பனோ
ஓதாதுணர்த் திடவன்புகூ ருபதேசதே வென்செய்வனீ
மாதாபிதா வுடலாவிநீ மனைகாணிபொன் வலிசெல்வநீ
நாதாவுநீ தாதாவுநீ நாராயணா நாராயணா.

இ-ள். ஆதாரமாகிய தேவதையென்பனோ அடியேனையாளுங் கர்த்தனேயென்பனோ பலநூல்களையோதாமல்தன்னிலேயறிந்திடஅன்புசெய்யாநின்ற உபதேசகுருவேயென்பனோ என்னென்றுசொல்லுவேன் தாயுந்தந்தையுந்தேகமும் உயிரும் பெண்சாதியும் காணியுந்திரவியமும் வலிமையுஞ் செல்வப்பிரபுவும் நீயேயன்றி வேறில்லை ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௬௩

வடுநிந்தையே னிடிவந்தியேன் மருள்விஞ்சினே னருளஞ்சினேன்
அடுசிற்றையே னெடுவிந்தையே னலைபண்பினே னுனைநம்பினேன்
விடுதுன்பிலேன் முறிகண்பிலேன் விளைமண்டினே னுனையண்டினே
னடுவொன்றிலே மிடைகுன்றுமே நாராயணா நாராயணா.

இ-ள். குற்றம்பொருந்திய நிந்தையையும் இடுவந்தியையும் மிகுந்தமயக்கத்தையும் அருளில்லாத பொல்லாத இருதயத்தையும் பலவிததுர்நடத்தையையும் காரியமென்கிற அலைச்சலையும் தீவினையையும்

இவைகளைக்கொண்டிராநின்ற நாயினேன் இரக்கத்திலே பயந்தவனாகி யன்பிலே துரிதமுள்ளவனாகிய ஒழிவில்லாமல் தேவரீரை யடைந்தேன் மத்தியிலே இன்னமொருவிதத்தினாலே எனதுவருத்தம் நீங்குமோ ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௪௪

குடிநீர்கொடி முகவேதிடீர் குடவெண்ணெயை வடியீர்பிரம்
படியீர்வெணீ றெறிபீர்விழிக் கதிகோரவஞ் சனமேயிடீர்
கடியீர்வயித் தியரால்வரா கமதாதிருக் குடமுட்டுமீள
கடியீரெனிற் பிணியஞ்சமோ நாராயணா நாராயணா.

இ-ள். குடிக்கும்படியாகக் கிஷாயங்கள் நீர்கொடுங்களென்றும்முகத்துக்கு வேதுபிடியுங்களென்றும் குடத்திலே யெண்ணெயைக்காய்த்துக்கொடுங்களென்றும் பிரம்புகொண்டடித்து வெளுத்த விபூதியையெறியுங்களென்றும் கண்களுக்கும் அதிகோரமாகிய கலிக்கம் போடுங்கோளென்றும் வயித்தியருக்குக் காட்டித் தீருங்களென்றும் பன்றியும் ஆடுங் கோழியும் பலிகொடுத்துச் சன்னத மாட்டிப் பாருங்களென்றும் சொல்லினால் இவைகளாலே நோய் தீர்வதுண்டோஸ்ரீமந்நாராயணா-எ-று. ௪௫

பிரம்புக்குமுள் ளிடுதாமரைப் பிணிகட்குநீள் பிணியுற்றவென்
உரம்புக்குளே யறியாததே னுலகற்கெலா முறைசோதிதோல்
வரம்புக்குளே யெலும்புக்குளே வழும்புக்குளே தழும்புக்குளே
நரம்புக்குளே புகவெட்கியோ நாராயணா நாராயணா.

இ-ள். முள்ளுகளோடுங்கூடிய பிரப்பம் புதறுகளுக்குந் தாமரைப்பிணிபல்களுக்கு மிகுந்த நோய்கொண்டிராநின்ற என்னுடையநெஞ்சுக்குள்ளே நுழைந்தறியாம லிருப்பதென்ன உலகத்திலிருக்கும் எல்லாவுயிர்கள்தோறும் வாசம்பண்ணாநின்ற சோதிநீயேயன்றி வேறில்லை ஆதலா லிதுதோலுடம்புமெலும்பும் வழும்பும் நிணமும் நரம்பும் இவைமுதலிய நாற்றமானபடியினாலே புகுந்தறிதலுக்கு வெட்கமாயினதோ ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௪௬

மன்றாடிய பதிசோபன மழைவண்ணனே விசயங்கர
வென்றாய்சயஞ் செயமச்சுதா மிகவாழிகே சவனேசுபங்
கன்றால்விலே வெறிதாய்பெருங் கலியாணமங் கலமாதலா
நன்றாகவெங் கடநாயகா நாராயணா நாராயணா.

இ-ள். கோபிகாஸ்திரீகளுடைய சபையிலே நடனம்பண்ணுகின்ற வனே உனக்கு அதிகசோபனம் மேகவண்ணனே உனக்குவிசயம் முதலையை வென்றவனே உனக்குச்செயம்செயம் அச்சுதனே உனக்குமிகுந்தவாழிகேசவனே உனக்குச்செயம் கன்றால் விளாங்கனியெறிந்தவனே உனக்குப்பெரிதாகிய கலியாணமாகுவனே உனக்குமங்களம்வேங்கடநாயகாநீ இத்தன்மையாக நன்றாயிருக்கவேண்டும் ஸ்ரீமந்நாராயணா-எ-று. சஎ

இந்தாவென வெனதிச்சைநீ யெளிதிலையே லிழிவாகுமோ
சந்தானமா மலராலருச் சனைசெய்குவார் தவிர்வார்களோ
வாதானபேர் துதியார்களோ வசுதேவர்போற் குறைபாகுமோ
நந்தாதபெண்ணைசெய்வளோ நாராயணா நாராயணா.

இ-ள்- அடியேனுடைய இச்சைபானபடியே இங்கேவாவென்றுதேவரீர் எளிதாகப் பலனைக் கொடுத்தருளினால் உமக்கு இகழ்ச்சியாகுமோ கற்பகமலரினாலே அருச்சனைசெய்யாநின்றதேவர்கள்விட்டுவிடுவார்களோ சந்நிதானத்தில்வந்தபேர்கள் துதியார்களோ வசுதேவருடையவுடைமையிலே குறைந்துபோகுமோ அழிவில்லாத ஸ்ரீமகாலட்சுமிநகைப்பாளோசொல்லும் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. சஅ

சிற்றப்பனோ துருவற்கிநீ கெதிபாண்டனோ பெரியப்பனோ
கற்றந்தைதே வசிதங்கையோ கண்டாகனன் மிதிலேசனோ
சுற்றந்தரோ பெறுவோரெலாங் கொடுவேன்வழக் கிடுவேன்விடேன்
நந்தப்படும் பொருடந்துபோ நாராயணா நாராயணா.

இ-ள். தேவரீர் முன்னாளையிலே இரட்சித்த பேர்களுக்குள்ளே துருவமகாராஜனுக்கு நீசிற்றப்பனோ கெதிபாண்டனெனுங் குயவன் உமக்குப் பெரியப்பனோ கல்லுருவம்போக்கிகிளிபோலப்பேசப்பண்ணுகின்ற அகலிகைபானவள் தவசிக்குத்தங்கையாகிய உமதுசிறியதாயாரோ கண்டாகனனென்னும் விரோதியானவன் உமக்குப் பெண்கொடுத்து மிதிலைச் சனகமகாராசனாகிய அம்மானோ இன்னம்பேறுபெற்றபேர்களும் உமக்கு உறவின்முறையார்களோ ஆதலால் சம்பந்தமில்லாத பேரையெல்லாம் இரட்சித்தபுடியினாலே தேவரீருக்கும் அடியேனுக்கும் வழக்கு விடுவதில்லை ஆசைப்பட்ட பலனைக்கொடுத்

து அப்புரம் போகவேண்டுமேயன்றி போகக்கூடாது ஸ்ரீமந்நாராய ணா-எ-று. சசூ

தன்னெட்டெழுத் தயன்மத்தகந் தனிலேபொறித் தடிநாவிலே
உன்னெட்டெழுத் தெழுதாமையா லுலகத்துளோ ரவனைத்தொழார்
கன்னெட்டிடத் தருநெட்டிடக் கனலெட்டிடக் கனகாவிபின்
நன்னெட்டெலாந் தொடர்பாதனே நாராயணா நாராயணா.

இ-ள். பிரமதேவனானவன் உலகத்திலேயுள்ள மானிடர்களுடைய தலைகளிலே தனது நெட்டெழுத்தைமாத்திரமெழுதிஅடிநாவுகளிலே தேவரீருடைய அஷ்டாக்ஷரத்தை எழுதாமற்போனபடியினாலேஅவனை ஒருவருந் தேடுகிறதேயில்லை முல்லைநிலத்திலேகல்லுகள்நெட்டிடவும் விருக்ஷங்கள்நெட்டிடவும் அக்கினிகள்நெட்டிடவும் விஸ்தாரமாகிய பசுக்கள்பின்னாலே நன்மைபெற நெடிதானதூரமெல்லாம் நடந்தருளாநின்ற திருவடியையுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. ருய

உரலுக்குமோ ருறுபஞ்சமோ வினைநச்சினே னெனையச்சமன்
விரல்விட்டுதோ வினைவல்லனோ விதிகைக்குமவ் விரலோசையால்
பொரலுற்றநோய் கழலப்பனாய் புதிதாமருந் தொருதூதனால்
நரலைக்குளாய் வரவேண்டுமோ நாராயணா நாராயணா.

இ-ள். குத்தாநின்ற உரலினுக்கு ஒருகாலத்திலேயும் தரித்திரம் வருவதில்லையே ஆதலால் உம்மிடத்திலே இச்சைகொண்டேன் இனியென்னை அந்தயமனானவன் விரல்விட்டுக்காட்டியறிந்து வினைசெய்யமாட்டுவனோ பிரமாவினுடைய கைகளிலேயிராநின்றவிரலும் என் தலையிலேயெழுத அசையமாட்டாது வருத்தத்தைச் செய்யாநின்ற நோயைத்திரும்படியாய்ச் செய்வதற்கும் புதிதாய் ஒப்பில்லாத சஞ்சீவியானது ஸ்ரீஅநுமாராலே வரவேண்டுமோ சீராபதி வாசனாகிய ஸ்ரீமந்நாராயணா. ருக

சமையாதிதே வதையென்பதுஞ் சமையாதிநின் பெயரென்பதும்
உமையாளுடன் பரமன்பரிந் துணைமாமறைப் பொருளென்பதும்
தமையாள்வதென் றிமையோதிலோத்தமையாதிபன் புகழ்கின்றதும்
நமையாமலே யெனையாளுவாய் நாராயணா நாராயணா.

இ-ள். சமயங்களுக்கெல்லாம் அதிதேவதை நீயேயென்றும் அருமைபத்துந்தரூகிபது உம்முடையபெயரென்றும் மகத்தாகியவே

தப்பொருள்நீயேயென்றும் உமையவளுக்குச்சிவன்பரிந்துநிச்சயம்ப ண்ணினதும் தேவதைகளுக்கும் திலோர்த்தமைக்கும் அதிபனாகிய தேவேந்திரன் தங்களைஇரட்சிக்குங்கர்த்தனேயென்றும்புகழ்கின்றது கெடாமற்படியென்னை இரட்சித் தருளவேண்டும் ஸ்ரீமந்நாராய ணா-எ-று. ருஉ

நீயாண்டரா லடிபட்டநா ணினைவில்லிநின் னுதரத்துளே
போளண்டகோ டியிலெந்தவூர் புறையிற்குளே விளையாடினேன்
மாயக்கடந் தறிவேனலோ வரதன்கெடீர் வானோர்க்கெலாம்
நாயன்கெடீர் விடுமன்பனே நாராயணா நாராயணா.

இ-ள். தேவரீர் அசோதைமுதலாகிய இடையராலே அடிப்பட்ட நாளையிலே யடியேனுக்குநினைவில்லாமற்போனது அதுஎதினாலேயென்றால் உமதுகுட்சிக்குள்ளே பிராகின்ற அண்டகோடிகளிலே எந்த சந்துகளுக்குள்ளேயோவிளையாடினேன் நீர்செய்யும்மாயம் நீங்கியறிந்தேனேயானால் தேவதைகளுக்கெல்லா மும்மைவரதனென்றும்நாயகனென்றும் அந்த இடையர்களுக்குத் தெரியப்படச்சொல்லிக் கெடுவீர்கள் விட்டுவிடுங்கோளென்று நீக்கிவிடுவேன் திருமேனி யென்னமாகநொந்ததோ இப்போது பெரியோர்களாலே யறிந்தேன் அறிந்துஞ் சமயத்திலே உதவாதேபோனேன் இனிவருந்தி என்னபிரயோசனம்-ஸ்ரீமந்நாராயணா-எ-று. ருங

காசிக்குளுங் கயையிற்குளுங் கழியாதபா தகனாகையால்
கூசிக்குலந் துணைவந்தியேன் குறைவாகுமோ வினையன்பதோர்
வாசிக்குவந் தருள்செய்குவாய் வயிரத்திரா வணன்றங்கைதன்
நாசிக்குவா ளுறியையனே நாராயணா நாராயணா.

இ-ள். காசியினிடத்திலேயுங் காயாவினிடத்திலேயும் வாசம்பண்ணினாலும் நீங்காதபாவியானபடியினாலே மனதுகூசிக்குலைந்து தேவரீரைத்தோத்திரம்பண்ணாமல் விட்டுவிட்டேன் அதினாலே உமக்குக் குறைவாகுமோ அடியேனுடைய வினையென்னும் வாசிதீரும்படியாய்வந்து கிருபைசெய்தருளவேண்டும் முன்னாளையிலே வயிரத்தோடுங்கூடிய இராவணன்தங்கையாகிய சூர்ப்பநகையினது மூக்கறும்படியாய் செய்த வாளாயுதத்தையுடைய ஸ்ரீமந்நாராயணா-எ-று. ருச

தாளுக்கவா வியநாவினுஞ் சலியாதுவா சனியானநோய்
ஆளைக்கெடா தின்றைக்குவா வசையாமலே யன்றைக்குவா

தோளுக்குவா ளியைசெய்தவன் றுயர்கண்டிரா வணனின்றுபோய்
நாளைக்குவா வெனுமையனே நாராயணா நாராயணா.

இ-ள். தேவரீருடைய திருவடிகளுக்கு ஆசைகொள்ளாநின்ற என துநெஞ்சிலேயும் நாவிலேயும் வருத்தமில்லாமல் வரவேண்டுஞ் சனி யானநோயானது அடிமையைக் கெடுத்துவிடாமல் இன்றைக்கேவர வேண்டுஞ் சரமதிசையிலே யமனைக்கண்டு சஞ்சலிக்குமுன்னமே அ ன்றைக்குவரவேண்டும் முன்னாளையிலே பாணங்களைத் தோள்களிலே யழுந்தும்படியாய் எய்து அவனது துயரத்தைக்கண்டு வயிரத்தையு டைய ராவணாநீ இன்றைக்குச்சென்று நாளைக்குவாவென்று கிருபை பண்ணுகின்ற என்னையனாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ருரு

விக்கற்கிடம் பொருமற்கிடம் விடுமூச்சுமே லெழுதற்கிடம்
கக்கற்கிட மிருமற்கிடங் கருதற்கிடம் திருதற்கிடம்
சொக்கற்கிடங் குளிர்தற்கிடஞ் சுடுதற்கிடம் வெருவற்கிடம்
நக்கற்கிடந் தருமையனே நாராயணா நாராயணா.

இ-ள். விக்குலென்றும் பொருமலென்றும் மேல்மூச்சென்றும் கக்க லென்றும் இருமலென்றும் கருதலென்றும் திருகலென்றுஞ் சொக்கு தலென்றும் குளிர்தலென்றுஞ் சுடுதலென்றும் பயப்படுதலென்றும் நக்கலென்றுஞ் சொல்லாநின்ற அந்த பீடைகளுக்கெல்லாம் இடங் கொடுத்திராநின்றதேயுடைத்தாகிய அடியேனை இரட்சித்தருளவே ண்டும் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ருசு

துளசீதளந் துளசீதளத் துயசீரதே குதிசீரதாம்
உளதாயிரம் பெயரெண்ணுநூற் றெருநகோடிமந் திரமேலதாம்
வளமார்பின்மாமணியென்னவே மணியாமெனைப் பிணியென்செயும்
நளகூபரன் பகைவென்றவா நாராயணா நாராயணா.

இ-ள். திருத்துழாயினது தளங்களிலே பொருந்துங்குளிர்ந்தநீரே குடிக்குங் கஷாயங்களுக் கெல்லாம் மேலாகிய கஷாயநீராகவுமதிலே பெற்றிராநின்ற ஆயிரந் திருநாமங்களும் நூற்றெருகோடி மந்திர ங்களுக்கு மேலாகிய மந்திரமாகவும் வளம் பொருந்தாநின்ற திரு மார்பினிலேயிருக்கும் கவுஸ்துவமணியேமணிகளுக்கெல்லாம் மேலா

கியமணியர்கவும் இருக்கின்ற ஆராயுமிடத்தில் இதுவேமணிமந்திர அமிழ்தமாகவிருக்கப்பிணியானது அடியேனையெனனசெய்யும் கள் கூபரனுடையசாபத்தைத்தீர்த்து அருளிய-ஸ்ரீமன்னாராயணா-எ-று.

சுவையோசையூறொளிமாமணந்தொடர்மனஞ்சுழல்கொண்டையும்
கலைமானுமானையும்விண்டிலுங் களிவண்டுமே விளங்கின்றபேர்
விலைத்தூயவென் றிவைதீயவென றினியுண்டிலே னினிஎன்செய்வே
னவைதீரவே யருள்செய்குவாய் நாராயணா நாராயணா.

இ-ள்-ஆகாரவுருசையினாலே கொண்டையும் மணியோசையினாலே கலைமானும் தேகபரிசத்தினாலே ஆனையுந்தீபப் பிரகாசத்தினாலே விட்டிற்பூச்சியும் வாசனையினாலே மதத்தவண்டு இவையைந்தும மனந்தொடர்ந்து சுழன்றுவிழுந்திறந்துபோவதுபோல எனதுபஞ்ச இந்திரியமும் இதுநன்மையென்றும் தீமையென்றும் தெரிந்து புசிப்பதில்லை இனியென்னசெய்வேன் இந்தக்குற்றந் தீரும்படியாய்க் கிருபைசெய்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௫௯

நெட்டேணியின்படியெட்டுமோ நின்னெட்டெழுத்தொழிலண்டமே
எட்டாமெனும் பதமெட்டவே யிரதிக்கசக் கரையேயதின்
வட்டேபசும் பழமேசதா மதுரித்தவா ரமுதேயெனுள்
நட்டேயருட் புனல்கட்டுவாய் நாராயணா நாராயணா.

இ-ள்-மூங்கில்களாலே நெடியவர்யமைத்திராநின்ற ஏணியின்படிகளினாலே யேறினால் பரமபதம்யெட்டமாட்டாது ஆதலால்ஏழுஆப்ரணத்தோடுக்கூடிய அண்டத்துக்குமேலே எட்டாவதாகிய அந்தப்பரமபதத்துக்கு ஏறிவரஉபாயமுண்டு அதுயாதெனில் நினதுதிருந்திமரமாகிய எட்டெழுத்தையும் எனதுநெஞ்சிலேநட்டு இரம்மியமான சற்கரையுங்கற்கண்டும் கனித்தமுப்பழமும் நித்தியமதுரமாகிய ஆராவமிர்தமு மிவைகளுடைய சுவைபோலே பரவும்படியாகக்கிருபைபபுனல்கட்டினால் ஏறிவருவேன் ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௬௰

காணுங்கணே குவியுங்கையே கருதுள்ளமே கனல்ரஞ்சனம்
பூணும்புயம் லளகாங்கமே புகழ்நாவதே திகழ்கேள்வியே

ஆணும்பெணுஞ் சரனென்பதே யவையல்லனு னபராதிகாண்
காணும்பெயர்க் காதாரமே நாராயணா-நாராயணா.

இ-ம்-தேவரீர் திருவடியைக்காணாநின்ற கண்களும் குவியாநின்ற கைகளும் நினையாநின்றஉள்ளங்களும் மந்திரக்கினிபொருந்தியசங்கு சக்கரவாஞ்சனைப் பூணாநின்றபசங்களும புளகம்கொள்ளாநின்ற தேகங்களும் புகழாநின்ற நாவுகளும் கேட்காநின்றசெவிகளும் இவைகள்பொருந்திக்குடும்பத்துடனே சரணாகதிபண்ணாநின்ற அடியர்களைப்போலப் பொருந்ினவனானல்ல மிகுந்த அபராதத்தையுடையவன் ஆதலால்தரிசனம்பண்ணவெட்கத்தையடைந்தேன் இத்தன்மையாம் வெட்கத்தையடைந்தபேர்களுக்கெல்லா மாதாரமாகிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௬௧

கவிநல்லதோ கவிதீயதோ கனமூடனேன் விதைவித்திடும்
புவிநல்லதேல் விளையெய்துமே புகழ்நல்லதேல் புகர்கேட்கவென்
செவிநல்லதே னருணல்லதே செயனல்லதே வியனல்லதே
நவினல்லதே வரினுவிலே நாராயணா நாராயணா.

இ-ள்-மிகுந்தமூடனானவன் பாடாநின்ற கவிதையானது நன்மையாயதோதீமையாயதோ தெரியவராது விதைக்காநின்றவிதையானது பூமிநல்லதானபடியினாலே விளையுமேயன்றி விளையாமற்போவதில்லை ஆதலாலுமதுபுகழுங் கிருபையுஞ்செயலும் இயலும்நல்லதானபடியினாலே அதையென்காதிலேகேட்டுநாவினால்தோத்திரம்பண்ணினால் நன்மைவருமேயறிய துன்பம்வருவதில்லை ஸ்ரீமந்நாராயணனே.

பசைகொண்டபா கவதாகமம் பருகாதுகா துருகாதுநெஞ்
சசைகொண்டபா தகனீரிலே யமிழ்வேனையா ணவமாதியாம்
சுசைகொண்டமோ துகைதாக்குமோ களவுள்ளநானுனதன்பிலேன்
நகைதொண்டகா ரியமாகுமோ நாராயணா நாராயணா.

இ-ள்-தேவரீரிடத்தில் அன்புபொருந்தாநின்ற பாகவதாள் சொல்லிய ஆகமசாஸ்திரங்களை எனதுகாதானதுகேட்பதுமில்லை நெஞ்சானது உருகவில்லை அலையாநின்ற பாதக்கடலிலே விழுந்த என்னைக் காமம் வெகுளிமயக்கமென்கிறபிரமை எடுத்துக்கொண்டு வினையானதுமோதியடிக்கசெய்யுந் திருட்டுமனத்தையுடைத்தானவனாயும்

மிடத்திலேபத்தியில்லாமல் பரமபதத்துக்கு காதல்கொண்டேதால் அந்தகாரியமாகுமோ ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௬௩

பலகூறுபட் டொருநெஞ்சுனன் பன்னரிசெ வங் கணுமானவா
விலைகூறுகொண் டேனைவிண் டதென்விரனீக்கிமோர் நுகர்வார்களோ
மலைகூறலாய் நீதானுமென் மதின்தனைவிட் டெனையொத்தனை
நலகூறுவார் சுரதேனுவே நாராயணா நாராயணா.

இ-ள்-அடியேன் பலவிதமான இடையூறுபட்ட நெஞ்சையுடையவனானேன் தேவரீர்வாய்பரிசம்போல யெங்கும் நிறைந்தவரானீர் ஆதலாலென்னைமாத்திரம் நீங்கும்படியானகுற்றத்தைத் தேடிவிட்டதென்னோ விறல்நீக்கி மோரைக் குடிக்கிறபேர்களழுவாரோ இருபையுற்றுப்பெருகிய உண்மையான இருதயத்திலே என்னை மறந்துவிட்டபடியினாலே தேவரீரும் அடியேனுஞ்சமானமேயன்றி அதிசயமில்லை நன்மையாக தோத்திரம்பண்ணுகின்ற தேவர்களுக்குக் காமதேனுவாகிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௬௪

வஞ்சித்ததே வஞ்சகயாகுநீ வடவேங்கடந் தனினிற்கவும்
நீஞ்சித்திரிந் தனன்வீழிலே நிழல்கண்டபின் வெயினிற்பரோ
காஞ்சித்தலந் தருளாளனே கனகோபுரக் கொடியாடுமொன்
நாஞ்சிற்றிருப் பதிவள்ளலே நாராயணா நாராயணா.

இ-ள்-அடியேனுடையநெஞ்சிலே ஆசைசொல்ளாநின்றதெய்வமாகிய தேவரீரிந்தத் திருவேங்கிடத்திலேதானே எழுந்தருளியிருப்பது தெரியாமல் வீணிலேயுலகமெல்லாந் திரிந்தலைந்தேன் இனி நிழல்கண்டபேர்கள வெயிலிலேநிற்பதுண்டோ கனம்பொருந்திய கோபுரங்களிலே கொடிகளாடாநின்ற அழகியமதில்களோடுங்கூடிய காஞ்சித்தலமுதலாகிய நூற்றெட்டுதிருப்பதிகளிலேயும் அருளாளனென்றும்வள்ளலென்றும்விளங்கிய ஸ்ரீமந்நாராயணனே எ-று. ௬௫

மைநாகமா ழியைபண்டிவாழ் வகையென்னநின் னருள்வெள்ளவாஞ்
சையினாலிருந் தகிலூறவே சமைவேனுறத் தருமாறெவன்
கையினாலறிந் திடரண்ணிய கருதீரநீ யருள்செய்திடும
நைனாரினிற் சரியாவனோ நாராயணா நாராயணா,

இ-ள்-மைநாகமலையானது சமுத்திரத்திலே முழுகிவாழுந்தன்மை போலதேவரீருடைய கிருபாசமுத்திரத்திலே ஆசையாயிருந்து ஊறும்படியாய்ப்பொருந்தின எனக்குக் கொடுக்கும்படியான மார்க்கம் எவ்விடத்திலேயோ தெரியவராது பிரமாவினுடைய சிரத்தைக்கிள்ளிப் பொருந்தாநின்ற தரித்திரம் திரும்படியாய்த் தேவரீர்கிருபைபண்ணுகின்றருத்திரனுககுச்சமானமாகமாட்டேனோஸ்ரீமந்நாராயணா.

எமக்கென்றுவாழ் குடும்பத்திலே யிழப்புண்ணுவா ரெமதாதயர்
தமக்கொன்றைவைத் திலரென்பரோகழக்குள்ளபேர் வழக்குள்ளபேர்
சுமக்கின்றவச் சுமையாளரைச் சுதன்மற்றையச் சுமைகட்கெலாம்
நமக்கென்னகா ரியமென்பரோ நாராயணா நாராயணா.

இ-ள்-எங்களுக்கென்று வாழாநின்றகுடும்பத்திலே அவதிப்படும்பேர்கள் நம்முடைய அவதிதிரும்படியாய் நம்முடையபிதாக்கள் நமக்கு ஒன்றையும் வையாமற்போனார்களேயென்றும் பாவிகள்அழுவார்கள் இந்தச்சம்சாரமாகிய சுமையைச்சுமக்காநின்ற புருஷன் அச்சுதனிருக்கையாலே அந்தச்சுமைகளைத் தாங்க நமக்கென்னகாரியமென்று அறிவாளர்சந்தோஷிப்பார்-ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௩௭

பசுகட்குமா யினைபாடியிற் பலபாடியா டியுமாயாதம்
சிசுகட்குமா யினைமைந்தனாய்த் திருட்டுக்குமா யினையன்றுதான்
முசுகட்குமா யினைநாயினேன் முகிப்புக்குமா யருள்பூவையே
நசுக்கிப்பின்வா சனைகொள்வரோ நாராயணா நாராயணா.

இ-ள்-ஆயர்பாடியிலேயிராநின்ற பசுக்கூட்டங்களுக்கு இரட்சகக்கர்த்தாவாகியும் இடைப்பிள்ளைகளுக்குப் பாலுடனே ஆடல்காட்டியுஞ் சிறுபிள்ளையாகி வெண்ணெய்திருடுந்தொழிலுக்கு இசைந்ததுமல்லாமல் முன்னாளையிலே குரங்குகளுக்குநேசமாகி இரட்சித்ததேவரீர் நாயினேனுடைய தளர்ச்சிக்குக்கிருபைபண்ணாமல் புட்பத்தை நசுக்கி முகர்வாரைப்போல் உபேட்சைபண்ணலாமோ ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௩௮

குலங்காணவே குடிகாணவே குணங்காணவே யழுதாயினம்
புலங்காணுநின் னடியாரெனிற் பவசாகரப் பரப்பெண்ணுளம்

கலங்காமலே கலங்காணுமே கழலாமலே கழல்காணுமே
நலங்காமலே நலங்காணுமே நாராயணா நாராயணா.

இ-ள்-குலவண்மையும் குலத்தின்சிறப்பையுங் குணப்பெருமையும் இவைகளைக்காணுமிடத்தில் பழுதாயிருந்தாலும் தேவரீருக்கு அடிமைப்பட்டார்களேயானால் மேன்மைபெருவார்கள் ஆதலால் பாவசமுத்திரப்பரப்புக்குள்ளே என்னுடையநெஞ்சமான தோணி கலங்கிலுந்தங்கி நலங்காமல் நலங்காணும்படியாய்க் கப்பலைப்போலே திருவடிகாட்டவேண்டும் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௭௬

ஈன்றோனுநீ யலனோனுமவ் வியலுந்தியன் டினனல்லனிற்
போன்றோனெவன் பெறுபிள்ளையைப் போபோபிதா வினவாதிரான்
சான்றோர்முனே யினிநோய்நீ தவிராயெனிற் சபதங்கெடும்
தான்றோரணாவீ சியவாளனே நாராயணா நாராயணா.

இ-ள்-என்னைபெற்றவனும் நீயல்லவோநானும் அருமையான இயல்பொருந்திய உமதுஉந்தியிலே இருந்தானுமல்லவோஉம்மைப்போல் எவரிருக்கிறார்கள் போபோபிதாவானவன்பெற்றபிள்ளையை வினவாதிருப்பானோ பெரியோர்கள்முன்பாக என்னுடையநோயை இனி தீராமற்போனீரானால் உமது சரணாகதி சம்ரட்சணையென்கிற நெறிகெட்டுப்போகும் பகைவரைவீசிய வாளாயுதத்தை யுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ௭௭

தஞ்சப்பதத் தனையங்கனே கட்டிக்களைந் தவசத்தராய்
நெஞ்சத்துநா ரணவென்றதா னியமித்துநித் திரைகொள்ளுவார்
கொஞ்சத்தைநின் றளவாக்குவாய் குணபத்தைவாழ்குடியாக்குவாய்
நஞ்சத்தையா ரமுதாக்குவாய் நாராயணா நாராயணா.

இ-ள்-தேவரீருடைய தாமரைபோலும் திருவடியை யுள்ளத்திலே நினைந்து ஞானக்கயிற்றினாலே அங்ஙனேகட்டிக் கரைந்துருகிபரவசத்தையடைந்து ஸ்ரீமந்நாராயணனேயென்று நிச்சயம்பண்ணி ஆனந்தநித்திரைகொள்ளுவார்கள் துரும்புபோலவிருந்தாலும் அவர்களை மகாமேருவாகச்செய்தருளுவாய் இதுவுமல்லாமறபுழுக்களை அயிஸ்வரியத்தையுடைத்தாகிய குடும்பங்களாகவும் விஷத்தையமிர்தமாகவுஞ் செய்தருளாநின்ற மகிமையையுடைய ஸ்ரீமந்நாராயணா-எ-று.

எழுநெட்டிருப் பருமேனிவந் தென்னைக்கக படுமென்றுநான்
தழுவிக்கொளத் தினைகின்றவென சகலச்சரா சரமாகுநீ
வழுவிக்கொடங் கிங்கோடிய வரநல்கமுன் வரவஞ்சியே
நழுவிக்கொடே திரிகின்றதென் நாராயணா நாராயணா.

இ-ள்-நெடியதாய்வளர்ந்திராநின்ற உமது திருத்தமேனியானது எனதுகைக்குள்ளே வந்தகப்படுமென்று நான் தழுவிக்கொள்ளத்தினைந்திட்டால் சகலசராசரங்களாகிய தேவரீரென்முன்னேவந்துவரத்தைகொடுக்கப்பயந்தோ அங்குமிங்குமோடிவழுவிக்கொண்டும் நழுவிக்கொண்டும் திரிகின்றதென்சொல்லும் ஸ்ரீமந்நாராயணா-எ-று.

எனைக்காக்கநீ வரமேன்மையென் றிருப்பாய்பராக் கழுதுண்டுமுன்
றனைக்காற்றவா கனமில்லையோ தருசேனைகா வலனில்லையோ
நினைக்காதசே டனுமில்லையோ நினைவில்லையோ விமையோர்பிரான்
றனைக்காத்தமா ருதியில்லையோ நாராயணா நாராயணா.

இ-ள்-அடியேனை இரட்சிக்கவருதல் மேன்மையென்றெண்ணியிருப்பீர் இருக்குமெண்ணத்தில் பராக்குவந்ததோ அல்லதுதேவரீருக்கு வாகனமாகவும் காத்துக்கொண்டிராநின்ற கருடனுஞ் சேனைக்காவலனும் ஆதிசேஷனும் தேவர்களாகிய வானவர்களுயிரை இரட்சிக்கச் சஞ்சீவிகொண்டுவந்த அநுமானாகிய விவர்களில்லாமற்போனார்களோ அல்லது திருவுள்ளத்திதில் ஞாபகமில்லையோசொல்லும் ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௭௩

கண்பொன்றுமோமகன்மாற்றவந்தடுத்தபொய்க்கிருள்பார்த்ததே
பண்பொன்றுநா லுறைசெய்யநான்பலபொய்ச்சொலால் விளையாடி
னேன், மண்பொன்றிநீரனல்பொன்றிவிண்வளிபோன்றவேவருமென்
றுளே,நண்பொன்றுநீதரல்வேண்டுமோ நாராயணா-நாராயணா.

இ-ள்.கண்பார்வைபோன திருதராட்டிரன் குமாரனாகிய துரியோதனனுக்குப்பகைவனான தர்மராசன் களவுபொய்சொன்னதிலே இருள்சூழ்ந்த நகரத்தைப்பார்த்தானென்றும் ஒப்பில்லாதபண்புபொருந்துஞ்சாஸ்திரஞ்சொல்லச்செய்யும் அநேகமானபொய்களை விளையாட்டாகச் சொல்லினேன் ஆகலால் எனக்கென்னகதியோ தெரியவாராது பிரிதிவுஅப்புதேயுவாயுஆகாயம்இந்தப்பஞ்சபூதங்களுந்தேவர்கு

குங்காலத்திலே அடியேனும்வந்து சேருவேன் அப்பேர்தாகிலும் உமதுநண்பொன்றுமாத்திரம்வைத்து இரட்சித்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௭௪

போகேந்திரன் சிரமேந்துமின் பூதேவிபுல்லரையேந்தவே
ஆகேனென்றுவுரைசெய்வளேலடியேனையேந் துகைவேண்டுவாய்
மாகேந்திரன் றனதம்பியே வடவேங்கடா சலவள்ளலே
நாகேந்தியே நகமேந்தியே நாராயணா நாராயணா.

இ-ள். சர்ப்பங்களுக்கு இராசனாகிய ஆதிசேஷன்முடிகளிலே ஏந்தாநின்றஉம்துதேவியாகிய பூமிதேவியானவள்பாபிகளைத்தாங்குதற்குவருத்தமாயிருக்குமென்று தேவரீருடைய திருச்செவியிலேவிண்ணப்பஞ்செய்தருள்வாள் ஆதலால்அடியேனைமாத்திரந்தாங்கிக்கொள்ளும்படியாய் வேண்டிக்கொள்ளவேண்டும் தேவேந்திரனுக்குத் தம்பியாகவும் திருவேங்கடமலைக்குநாயகனாகவும பொருந்திப்பாஞ்சசன்னியத்தையுங் கோவர்த்தனகிரியையு மேந்தியருளாநின்ற ஸ்ரீமந்நாராயணனேஎன்றவாறு ௭௫

ஊழிற்பிறந் திடுபாவநோ யுடலைத்தொட வகைதந்திடால்
வாழிக்கநா யகனிந்திரன் மனுவின்பதம் பெறவிச்சியேன்
ஆழிக்கையுண்கொடைமிக்கதேன் றடியேன்மிகப்பெரலாகுமோ
நாழிக்குடங் கலகொள்ளுமோ நாராயணா நாராயணா

இ-ள். இகத்திலே மனுச்சக்கிரவர்த்தியினுடையபதமும்பரத்திலே வாழ்வுக்கு நாயகனாகிய இந்திரனுடைய பதமும் இச்சையாகவேண்டுவதேயில்லை ஆகையால்ஊழ்வினையினாலேபிறந்திடாநின்றபாவநோயானது அடியேனுடைய தேகத்திலே சேராவகைசெய்தருளிப்பரமபதத்தைத்தேவரீர்கடாட்சித்தருளவேண்டும் திருவாழிதரித்ததிருக்கரத்தையுடையவனே உம்மிடத்திலேமிகுந்ததியாகமுண்டென்றுநானிச்சைகொண்டதினாலேமிகுந்துவருமே என்பிராப்தியெவ்வளவோ அவ்வளவேமுடியும் அதுவும் எத்தன்மையெனில் நாழிக்குடத்தைக்கொண்டுபோய்ச் சமுத்திரத்திலே யமிழ்த்தினால் நாழிகொள்ளுமேயன்றிக்கலங்கொள்ளுவதில்லை ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௭௬

தனுவுக்குளே யுளராறுபேர் சவிகைக்குநாயகருன்னைநான்
பனுவற்சொலா வரைதட்டுவார் பழகிச்சதா செறிகட்டுவார்

அஞ்ஞுவற்றசோ ரனைபெற்றியே யடியேனையா ளாசென்னவே
நஞ்ஞுஇங்கொடே திரிகின்றனன் நாராயணா நாராயணா.

இ-ள். என்னுடையதேகத்துக்குள்ளே இராநின்ற காமம்-குரோதம்-
லோபம்-மோகம்-மதம்-மார்ச்சரியமென்றுசொல்லாநின்ற இந்தஆறு
குற்றங்களும் சவிகைக்குநாயகராய் நித்தியமும்பழகித் தேவரீரை எ
ன்னை தமமிடகவிந்தகளாலே பாடாதவகைகொடுப்பதுமல்லாமல் ந
ன்மார்க்கத்தையுஞ்சொடுக்காநின்றகிரமம்நீங்கிய திருடர்களைக்கொன்
று அடியேனை இரட்சிததருநம்கர்த்தனேயென்று அடுத்துக்கொண்
டுதிரிகின்றனன் ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௭௭

உடைச்சேலைதா குழக்கோலைதாவுணச்சோறுதாபணப்பேறுதா
கடைப்பூவடா வடைககாயடாகறிக்காயடா கடைக்கோளனே
இடைக்கோடிவா முடிக்கேதடாகிறுபாலையர் வெறுப்பார்பொல்லா
நடைக்காசையா யிறுதேனலோ நாராயணா நாராயணா.

இ-ள். உடுக்கிறதற்குச் சேலைதாடாவென்றும் காதுக்குப் பொன்
னோலைதாடாவென்றும்உண்கிறதற்குச்சோறுதாடாவென்றும்மிகுந்
த பணங்களை தாடாவென்றும் பாக்குவெற்றிலை தாடாவென்றும் க
றிக்குக்காசுதாடாவென்றும்கடைப்பட்டகோளனேயென்றும் படுக்
கைக்குஓடிவாடாவென்றும்அடுச்சோமணிலேமுடிச்சேதாடாவென்று
ம் கிறுதாகப்பேசி வெறுத்துக்கொள்ளாநின்றவேசியருடைபொல்லா
தநடத்தைகளிலேஆசையாய்த்திரவியத்தைஎல்லாம்இழந்துவிட்டுவி
ழலானேன் ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௭௮

கன்னிப்பெருங் கடலோடுவான்கம்பத்திலே விளையாடுவான்
உன்னிக்கொளும்பயமென்னநோயொருமடுநெஞ்சொறுமிக்கிலேன்
என்னிற்பயந் தெளிவித்திடா யெல்லோர்க்குமீந் தென்மட்டிலே
நன்னிக்குணமபிடிப்பட்டதே நாராயணா நாராயணா

இ-ள். பெரிதாகிய கடலிலேநீந்தவும் கம்பத்திலேறி விளையாடவும்
பொருந்திய இளம்புத்தியை யுடையவன்சென்றபிறப்பாடுநினைத்துக்
கொள்ளாநின்ற பயங்களைப்போலேநோயானதுவருந்திபுமென துநெ
ஞ்சமொருமித்ததில்லை என்னிடத்திலே உண்டாகிய பயத்தைத்தெ

ளிகிர்க்கருளவேண்டும் யாவருக்கிருண்பசெய்கிற நீ என்மட்டுஞ்செய்தசெ
ருள் உமக்குளோபகுணம் பிடிபட்டதோ ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௭௯

புட்புள்ளவன் கொடியென்னவேபொற்பொன்னவன்கலையென்னவே
கட்புண்டரீகமலத்தினோர் கண்ணென்னவே கரைகின்றிலேன்
சட்புள்ளவின் சமயத்திலே சலமண்டினேன் சரணடினேன்
நட்புள்ளதோ பகையுள்ளதோ நாராயணா நாராயணா.

இ-ள். பட்சிரூபமாகிய கருடக்கொடியனே யென்றும்வண்மைபெ
ற்றசுவர்ணவஸ்திரனேயென்றுந் தேனோடுகூடிய சிவந்ததாமரைக்கண்
ணனேயென்றுங் கரைந்துருகாதபாவியானவன்உமது சமயத்திலேவை
ராக்கியம் பொருந்தித் திருவடியடைந்தேன் அடியேனிடத்திலே நேச
மோ பகையிருக்குமோ தெரியவராது ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௮௰

கச்சுப்பிதிர்ந் தெழுகொங்கையார் கடைவாள்விழிப் படைகோடிகள்
தச்சுக்கிடந்திடுநெஞ்சிலே தனியம்புதைத் தவருப்பவரோ
பிச்சுத்தையா பரனுனதீ பெருமந்திரந் தனிலாற்றுவாய்
நச்சுப்பெருஞ் சுதைவேலையாய் நாராயணா நாராயணா.

இ-ள். கச்சடங்காமலெழுந்த கொங்கைகளையுடைய கன்னியர்கடை
க்கண்பார்வையாகிய ஆயுதகோடிகள் எனதுநெஞ்சிலே தைத்துருகிப்
புண்ணாகியது அந்தநோயை என்சொல்லுவேன் ஒருபாணம்பட்டவர்க
ள் பிழைப்பதில்லையே ஆதலால்நித்தியபரனானையினாலே இந்தப்பாணங்
களைப்பிடுங்கிப் புண்களை உமதுபெரிதாகிய திருமந்திரத்தினாலே ஆறு
ம்படிசெய்தருளவேண்டுமே ஆசையுடனே உயர்ந்த அமுதக்கடலிலே
மேவும் ஸ்ரீமந்நாராயணா.எ-று. ௮௧

எய்தாரிருந் திடவம்பைநோ மிழிவாளர்போற் பழிபாதகம்
செய்தாரிருந் திடலன்றியே தெய்வந்தனைச் சினதவாகவே
வைதாவதென் வினைத்திலே வழிதப்புமே வாய்பாறுமே
நைதாதுவின் பகாரனே நாராயணா நாராயணா.

இ-ள். பாணத்தையெய்தவனிருக்க அம்பைநோகாநின்ற இழிவள
ர்போலே பழிபாதகஞ் செய்தானல்லவோ அநுபவிக்கவேண்டும் அது

வன்றித்தேவரீரை விதனத்திலே கெடுத்தலாகவை தென்ன பிரயோசன
மென்றால் நன்மார்க்கமுஞ்சத்தியமுங்கெட்டுப் போகுமேயன்றிவேறி
ல்லை சாமதிசையினாலே நைந்துபோகாநின்ற தாதுவுக்கு வயித்தியனா
கிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௮௨

முகிலுக்குளே யடிபட்டவோர் முதுமக்கள்போற் றுணிவிக்குநோ
மிகலற்பமோ விடுவித்திடாய் விமலத்தநீர் மடுவுக்குளே
துகிலைக்கெடாய் துகில்விட்டிடாய் தொழுவெட்கமே வியமைக்கணார்
நகிலுக்குள்வீழ் நகையச்சுதா நாராயணா நாராயணா.

இ-ள், மேகவருஷத்தி லடிபட்ட கிழவர்கள்வருந்தத்தையடைந்து இறக்குமாப்போல அடியேனிறக்கும்படியாய்த்துணிந்துசெய்யாநின்ற நோயானது பெருகுதல்சொற்பமல்லவே ஆதலாலது நீங்கும்படிக்குக் கடாட்சித்தருளவேண்டும் முன்னாளையிலே பரிசுத்தமான சலத்தோடுங்கூடிய யமுனா நதியிலேஸ்நானம்பண்ணாநின்ற கோபிஸ்திரீகளுடைய வஸ்திரங்களை அபகரித்துக்கொண்டுபோய்க்கொடாமலும் விட்டு விடாமலும் நின்றகாலத்திலே அவர்களும்மைத்தொழுதுகேட்கவெட்கத்தை யுடையவர்களாய் மைதீட்டிய கண்பார்வையானது தங்கள் கொங்கையிலேபடியத்தக்கதாய்த்தலையைகவிழ்ந்துகொள்ள நகைத்தருளாநின்றஸ்ரீமந்நாராயணா-எ-று. ௮௩

கமலத்தைவந்தயல்வண்டுணுங் கருநாத தேனைகளொக்கவே
அமலத்தநீ ரிடைவாழினு மதுபோலவே யயலாரெலாம்
நிமலப்பதந் தொழுமூரிலே நிலைபெற்றிருந் துணைவந்தியேன்
ஞமலிக்குமோ ரருள்செய்திடு நாராயணா நாராயணா

இ-ள்-பரிசுத்தமான சலத்தோடுங்கூடிய தடாகத்திலேயிராநின்ற தாமரை யினுடைய பெருமையை யத்துடனேபிறந்ததவளை யறியமாட்டாது பக்கங்களிலேயிருந்துவண்டுகளதின்தேனைச் சாப்பிட்டுச் சந்தோஷத்தையடையுமாப்போல தேவரீர்நிலைபெற்றிராநின்றவூரிலே அடியே னிருந்துந் தேவரீரைத்தோத்திரம்பண்ணிக்கடைத்தேறவறியேன் அயலிலேயிராநின்றபிரமாமுதலாகியபேர்களெல்லாந் தேவரீருடைய பரிசுத்தமான திருவடியைத் தொழுதுகடைத்தேறுகிறார்கள் கடைகெட்ட சுவானத்துக்கும் கிருபைசெய்தருளின ஸ்ரீமந்நாராயணா-எ-று.

என்மாடுவீ டென்பிள்ளைபெண் டென்காணிமண் ணென்சொம்மெனும்
தன்மாலிலே யறியாதபோ தனதாகுமோ தானவதார்

வன்மாயமென் றதுகண்டுநின் வடவேங்கடப்பதிவைகியே
தன்வானுபர் நிலைநிற்பரே நாராயணா நாராயணா.

இ-ள். என்மாடென்று மென்வீடென்று மென்பிள்ளையென்றும் என்பெண்சாதியென்றும் என்காணிமண்ணென்றும்என்னுடைமையென்றும் தங்கள்மயக்கத்தினால் மூடரானபேர்சொந்த மென்றிருப்பார்கள் அவைகள்தங்களவாகுமோ அவைகளுக்கும் இவர்களுக்குச் சம்மந்தமென்ன இவையெல்லாம் வலிமையாய் கையென்றுதெளிந்து நன்மை பெற்றமானிடரெல்லாந் தேவரீருடைய திருமலையைநித்திய பதார்த்தமென்று நிலைபெறுவார்கள் ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௮௫

பரலோகமும் பரரூபமும் பரபோகமும் பரமாயவும்
சுரலோகமுஞ் சுரரூபமுஞ் சுரபோகமுஞ் சுராயவும்
திரலோகமென் றிவையாவையுந் திருவேங்கடந் தனிலுள்ளதால்
நரலோகமே மிகநன்றுகாா் நாராயணா நாராயணா.

இ-ள்-பரமபதமும் திவ்யதிருமேனியும் நித்தியானந்தமும் நித்தியதத்துவமுமற்ற இமையவர்நாடுமிமையவர்மேனியுமிமையவர் ஆயுளும் இமையவர் போகமும் இமையவர்களுக்குநாயகனாகிய இந்திரனுடையபதவியும் இவைகள்முதலாகிய ஐஸ்வரியங்களெல்லாந் நமதுதிருவேங்கடத்தை யடைந்தபேர்களுக்கெல்லா முண்டாகிய தன்மையினாலே இந்தநரலோக மிகுந்த நன்மையானது ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௮௬

அசவாதவன் பழிவேடரா மடியேனுடம் பிணிநோயெலாம்
கசவாதுநின் பவர்போலவே தவராமலின்கருள்கூறுவாய்
குசவாயுத சுறுகோவலா குறுவேதியா குலமன்னர்மா
னசவாவியிற் பயிலன்னமே நாராயணா நாராயணா.

இ-ள். அசைவில்லாமல் வலிய பழியைச்செய்யாநின்றவேடரானவர்கள்தயவில்லாமல்மிருகங்களைக்கொன்றுதின்னுமாப்போல அடியேனுடைய தேகத்தைப்பிணியானதுபிடுங்கித்தின்னாமல்இவ்விடத்திற் கிருபைசெய்தருளவேண்டுங்கலப்பையாயுதந்தையுடையவனே இளமையாகிய கோபாலனே குட்டனாகிய வாமனனே சூரியகுலமன்னவனேமானசமடுவிலே விளையாடாநின்ற அன்னரூபமாகிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௮௭

மீன்கூருமங் கிடிபாதியாண் மிருகங்குறள் பாசாளிகோ
மான்கூரலா யுதனையன்மேல் வருவாசியும் பெருவாசியோ

தேன்கூறுமா சம்சாரமுந் சிறுபோகமோ சமாசாரமும்
நான்கூறுமங் குருபத்தனே நாராயணா நாராயணா.

இ-ள், மச்சமென்றும் கூர்மமென்றும் வராகமென்றும்நரசிங்கமென்றும் வாமனனென்றும் பரசுராமனென்றும் ஸ்ரீராமனென்றும்பலராமனென்றும்ஸ்ரீகிருஷ்ணனென்றும் வந்ததல்லாமல்மேலுங்கற்கியாய்வருவதினாலே உமக்குப்பெரிதாகிய பலனுண்டோ மதுரம்பொருந்திய ஆகமசாத்திரமுஞ் சிற்றின்பமாகிய கர்மசாரமும் நான்குசாரமும் ஓதுவித்தகுருவாகிய சாந்திபருக்குப் பத்தனாகிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. அரு

மிருந்தற்கா தெனதாவியின் விளக்கிற்கு ன்னறுநெய்யிடாய்
பொறுக்கத்தகா துகமெய்யுடல் புழுக்கத்தகாதெ நாருமேரிலே
குறுக்கிட்டபேர் நடுக்கிட்டிடக் குலேவாணனர் திரடோளெலாந்
நறுக்கிக்கையோர் துணைவிட்டவா நாராயணா நாராயணா.

இ-ள், அவமாகிய எனதுதேகமானதுபுழுக்கஞ்சிறிதும்பொறுக்கத்தகாமல் இறந்துபோகிறதற்கு நியானகாரியமல்லவே யாதலால் உயிராகியவிளக்கமானது அவிந்துபோகாமல் தேவரீர்கிருபையாகிய நெய்யமுது பெய்தருளவேண்டும் ஒப்பிலாதனந் முகந்திலே குறுக்கிட்ட சிவன் முதலாகியபேர் நடுக்கங்கொள்ளப்பொல்லாதவாணாசுரனுடைய விஸ்தாரமானதோள்களை யெல்லாஞ்சக்கரத்தினாலெறுக்கிஇரண்டுகை கைமாத்திரம்விட்டருளிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. அரு

புன்சொல்லிலே யகப்பட்டதும்போதாமலே யவமேற்றெனக்
கென்சொல்லுமோ மெனவெண்ணியோ யாதோவெனக்கியாதுநீ
தென்சொல்லிலே வடசொல்லிலே திருவாய்மொழிச் சதுர்வேதமா
நன்சொல்லிலே விளையாடிவாய் நாராயணா நாராயணா.

இ-ள், அடியேனுடைய மூடபுத்தியினாலேபாடாநின்றபுல்லிதாகிய கவிதைச் சொல்லினாலேஅகப்பட்டதும்போதாமல் எனதுஅக்கியானத்தையெல்லாம் ஏற்றபடியினாலேஇவனுக்குஎன்னசொல்லுமோவென்று திருவுள்ளத்திலே யெண்ணியதோ என்னமோகிருபைசெய்தருளாமலிருப்பதை அறிகிலேன்தமிழாகியதென்சொல்லிலேயுங் கலறந்தமாகிய வடசொல்லிலேயுந் திருவாய்மொழியென்னும் நான்குவேதத்தினுடைய நன்மைபெற்றசொல்லிலேயுந்திருவிளையாடல் செய்தருளாநின்ற ஸ்ரீமந்நாராயணா-எ-று. கவி

மெலியாமையுந் திருஞானமு மிகுபோகமுந் திடதேகமுஞ்
சலியாமையும் பகைநாசமுந் தனராசியுந் தகுசீலமுங்
கலியாணமும் பெறநீதாக் கடனாளியாற் பிணுமுன்னைநான்
நலியாமலே யருள்கூறுவாய் நாராயணா நாராயணா.

இ-ள்.மெலிதலில்லாமையும் அழகியஞானமும் மிகுந்தயோகமும் வலியதேகமும் சலியாமையும் பகைநாசமுந் திரவியராசியும்யோக்கிய மான ஆசாரமுங்கலியாணம் இவையெல்லாந் தேவரீரிடத்திற்பெறும்படியான கடன்காரனாகலால் இனிஉம்மை நான்வருந்தாமல் பூரணமான கிருபை செய்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா-எ-று. கூக

சமர்த்தேதுநல் லறமேதருந் தயையேதருந் தவமேதுமிக்
கமைத்தேதுமே லடைவேதுகா ரணமேதுபூ ரணமேதுசங்
கமத்தேதுரா கதமேதுசொல் கமையேதுசெல் கதியாவுநீ
ரமத்தேதுவா ரகைவாசனே நாராயணா நாராயணா.

இ-ள்,சாமர்த்தியங்கள் தானேது நல்லதருமங்கள் தானேது அருமையான தயவுகள்தானேது அரியதவங்கள்தானேது மிகுந்தஅமைப்புகழ்தானேது மேலாகிய அடைவுகள்தானேது காரணங்கள்தானேது பூரணங்கள் தானேது சொல்லாநின்ற மோட்சங்கள்தானேது இவைகள்யாவும்.தேவரீருடைய கிருபையே யன்றிவேறில்லை ஆதலால் உமது திருவடிகளுக்கே நமஸ்காரஞ்செய்து நின்றேன் துவராகாபுரிவாசனாகிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. கூஉ

பித்தங்கயஞ் சொரிதேமல்கம் பிதமீளைகா மலைபாண்டிவுன்
மத்தஞ்சுரஞ் சளிசன்னிகால் வலிசூலைவிக கூதல்கக்குவா
யுந்தம்பனந் தலைநோவுமற் றுளநோயெலாந் தொடராமலென்
நந்தம்மகற் றொருகாவல நாராயணா நாராயணா.

இ-ள்,பித்தம்-க்ஷயம்-சொரி-வெள்ளைப்பாண்டு-நமை-ஈளை-காமாலைப்பாண்டு உன்மத்தம்-சுரம்-சளி-சன்னி-கால்வலி-சூலைவிக்கல் கக்குவாய்-தம்பனம்-தலைநோய் மற்றுஞ்சொல்லாநின்ற-நோய்களெல்லாம் அடியேனைத்தொடராமல் இரட்சித்தருளவேண்டும் ஆசை கொள்ளாநின்ற அழகிய தேவர்களுக்கெல்லாம் ஒப்பிலாத தெய்வமாகிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. கூ௩

துறையூருமா முதலைக்குலச் சுனையொத்தமன் னவர்வாசலில்
குறையூர்வதுங் கசைசாடவே குலைக்கின்றதுந் தலைசோரியாய்
முறையூர்வதும் பிறருன்னையே முனிடாவமுந் தெரியேனலோ
கறையூரனே கருடாசலா நாராயணா நாராயணா.

இ-ள், முதலைக்குலஞ் சஞ்சரியாநின்ற துறையையுடைய சுனைபோலேயிராநின்ற துஷ்டமன்னவாசலிலே குறைவுகளைச்சொல்லுமிடத்தில் அவர்கள் தருமம் விசாரியாமல் சேர்ந்தபடிக்குப் பிரம்புகளாலே அடித்திட்டுத்தேகம் நொந்து தலைகளிலேஉதிரம்பெருகும்போதுமுறையமிட்டுக் கேள்வியில்லாமற் பிற்பாடுதேவரீரைத் தெய்வமே யென்று வெறுத்துக்கொள்பவருடைய பாவந்தீர்வதேயில்லை ஆதலால்தேவரீர் சந்நிதானத்திலே முன்னமே முறையமிட்டேன் திருனறையூரிலேயுந் திருவேங்கடமாகிய கருடாசலத்திலேயும் நிலைபெற்ற ஸ்ரீமந்நா நாராயணா-எ-று. ௬௪

பிணிவிட்டதே விதியாவையும் பிழைவிட்டதே சுகசீவியாய்
புணிவிட்டதே நமனூரெனும் பகைவிட்டதே புலபூசலும்
தணிவிட்டதே யதிஞானமே தரவிட்டதே யுனையோதவாய்
நணிவிட்டதே யென்மட்டிலே நாராயணா நாராயணா.

இ-ள். அடியேனுடைய சனனங்கடோறுந் தொடராநின்ற பிணிகளையும் விதிகளையும் யமன் பகைகளையும் மன்மதன் சண்டைகளையு மிவைக முதலாகிய யாவையும் நீக்கிச் சுகசீவியாகவும் அதிக ஞானியாகவும் வாக்கினாலேஓதும்படியாகவும் என்மட்டிலே பொருந்துதலாகத்தேவரீருடைய கடாக்ஷவீக்ஷணியஞ்செய்தருளியது ஸ்ரீமந்நாராயணா-எ-று.

வாட்செய்தபுண்ணியங்கோடியென் வழிசெய்தபுண்ணியங்கோடிஎன்
தாய்செய்தபுண்ணியங்கோடிதந் தையர்செய்தபுண்ணியங்கோடிஎன்
யாசெய்தபுண் ணிடங்கோடியென் பதிசெய்தபுண்ணியங்கோடியென்
நான்செய்தபுண்ணியங்கோடிதா நாராயணா நாராயணா.

இ-ள், எனதுவாக்கும் எனதுமரபும் எனதுமாதாவும் எனதுபிதாவும் எனதுபாடலும் எனதுஊரும் எனதுநாவும் இவைகளெல்லாஞ் செய்தபுண்ணியம் அனேகங் கோடியானபடியினாலே தேவரீரைப் பிரசன்னமாகக்காணக்கிடைத்தது ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௬௫

உன்கோயிலென் கால்சூழவு முன்பாதமென் கண்காணவும்
நின்பாடலென் வாய்பாடவு நின்காரியங் கைசெய்யவும்
என்காதுநின் புகழ்கேட்கவும் மென்னெஞ்சநின் னினைவுன்னவும்
நன்காகநல் வரமேதரு நாராயணா நாராயணா.

இ-ள், உமது திருக்கோயிலை என்கால் சூழவும் உமது திருவடியை என் கண்காணவும் உமது சரித்திரத்தை என்வாய்பாடவும் உமது கைங்கரியத்தை என்கைசெய்யவும் உமது புகழை யெனது காதுகேட்கவும் உமது தியானத்தை என்னெஞ்சு செய்யவும் இத்தன்மையாகிய நல்ல வரத்தைக் கொடுத்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௯௭

இற்கண்ணெலா நாராயணா மெங்கெங்கணு நாராயணா
சொற்கண்ணெலா நாராயணா தொழிலெங்கணுநாராயணா
முற்கெண்ணெலா நாராயணா முகமெங்கணு நாராயணா
நற்கெண்ணெலா நாராயணா நாராயணா நாராயணா.

இ-ள். வீடுகள் யாவையினும் வெளிகள்யாவையினும் சொல்லுகள் யாவையினும் தொழில்கள் யாவையினும் முன்னர்கள் யாவையினும்முகங்கள் யாவையினும் பரிபூரணமாயிருப்பதும்தேவரீரே யன்றிவேறொருண்டோ ஸ்ரீமந்நாராயணா-எ-று. ௯௮

தேறுந்திருப்பதிவேங்கடந் தெரிசித்துநாரணவென்றுதான்
றூறும்படிப் பவர்பன்னுவார் நூறுந்திருந் துலகாண்டபின்
பேறும்பெறும் பிள்ளைப்பெறும் பெருமைப்பெறும் பெருவிப்பையே
நாறுந்துழாயணிமார்பனே நாராயணா நாராயணா.

இ-ள், வேதமுடிவிலே தேறுநின்ற திருவேங்கடமென்னுந் திருப்பதியைத் தரிசித்த ஸ்ரீமந்நாராயணசதகம் நூறுபாடலையும் படிப்பவர்களும்அர்த்தனங்களாராய்பவர்களும் நூறுவருஷமுமிருந்து பிள்ளைகள்முதலாகிய உலகாக்ஷியினதுபலனை அனுபவித்தபிற்பாடு அவர்களுக்குப் பெருமையைப் பெற்ற பரமபதத்தைக்காட்சித்தருளநின்ற பரிமளிக்குந் திருத்துழாயணிந்த திருமார்பையுடையஸ்ரீமந்நாராயணா-எ-று.

நனிவாழிநின் பல்கோயிலு நனிவாழிநின்
நனிவாழிநின் கூடியாரெலா நனிவாழிநின் பல்வைபவம்
நனிவாழிநின் வடவேங்கட நனிவாழிநின் கவிகற்றபேர்
னிவாழிநின் கவிகேட்டபேர் நாராயணா நாராயணா.

இ-ள்‘சோழநாட்டிலும் பாண்டியநாட்டிலும்மலைநாட்டிலும் நடுநாட்டிலும் தொண்டைநாட்டிலும் வடநாட்டிலும் தேவரீர் நித்தியவைபவமாய்விளங்காநின்ற திருவரங்கம் பெரியகோயில் முதல்பரமபதம் அந்திமமாகவிராநின்ற நூற்றெட்டுந் திருப்பதியிலும் பாகவதர்கள் உச்சிகக் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிராநின்ற தேவரீருடைய திருக்கோயில்களெல்லாம் பல்லாண்டுபல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது தேவரீருடைய வட்சஸ்தலத்தி லின்பமுற்று வீற்றிராநின்றமகாலட்சுமியும் பூமிப்பிராட்டியும் நீளாதேவியும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாகவாழக்கடவது திரிகாலங்களிலும் இடைவிடாமல் தமதுதிருவுள்ளமே ஆலயமாகச் செய்துகொண்டு தேவரீரைத்தியானஞ் செய்ய கடல்சூழ்ந்த இவ்வுலகத்தின் கண்ணுள்ள பரமபாகவதர்க ளியாவரும் பல்லாண்டுபல்லாண்டு மிகுதியாகவும் வாழ்வும் தேவரீருடையமகிமையுற்று விளங்கும்வைபவங்கள் பல்லாண்டுவாழவும் சமஸ்கிருதபாஷைக்குமெல்லையாகியும் சதுர்வேதங்களுஞ் சொல்லப்பட்டபொருள்களுக்கெல்லாம் முடிவாகியும் தர்மத்துக்குவரம்பாகியும்பூமியும்பூமிதேவிக்குமணிமுடியாகியும் தனக்கொப்பில்லாமல் பெருமைபொருந்திய சொர்ணமாகியும் ஓங்கியதேவரீர் எழுந்தருளியிராநின்ற வடக்கின்கண்ணுள்ள திருவேங்கடமலையும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது திரிகாலக்கியானிகளாகிய வசிஷ்டவாமதேவ விஸ்வாமித்திர வியாசபராச சுகசவுனகாதிரிஷிகளும் பதோத்தமர்களாகிய இராமாநுஜாசாரியரும் வரகவிகளான தண்டிபவபதிகாளிதாசன் கம்பாமுதலாகிய கவிச்சக்கிரவர்த்திகளும் பரமபாகவதோத்தமர்களாகிய அழகியமணவாளப்பிள்ளைப் பெருமாளையங்கார் முதலாகிய பரமபாகவதபக்தர்களுமாகியஇவர்களாற் செய்தருளிய வேதங்களும் வைஷ்ணவாகமங்களாகியஸ்ரீபாஞ்சராத்திரவை காசனங்களும் இதிஹாசங்களாகிய இராமாயணபாரதங்களும் வாமம் வராகமுதலிய புராணங்களும் மற்றுமுள்ள நூல்களுமாகிய இவைகளில் சொல்லப்பட்டிருக்கிற தேவரீருடைய நித்திய கல்யாண குணங்களை அத்தியயனஞ்செய்த பாகவதர்கள் யாவரும் பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது இவ்வாறு மகிமையுற்ற தேவரீர் விஷயமாகத் செய்தருளிய கவிகளைச் சிரவணானந்தத்துடன் கேள்வியுற்ற பாகவதர்களியாவரும் பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது ஸ்ரீமந்நாராயணா-என்றவாறு. ௱

வடவேங்கடநாராயணசதகம்-மூலமும்-உரையும்

முற்றுப்பெற்றது.

லாகுத்த ஆலா இன்று கொடுத்தானென்று சொல்லிப், பின்ன ரும், நபிநாயகத்தைப் பார்த்து வானவர்களெல்லாம் வாழ்த்தெடுத்துக் கொள்ளும்படியாய் அழகிய வேதத்தை யோதுமென்றார். இச்சொல்லை ஹபீபுறப்பில் ஆலமீன், செய்யிதுல் முறுசலீன், முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் கேட்டுச், ஜிபுரீல் அலைகிஸ்ஸலாத்துடைய முகத்தைப் பார்த்து, மூன்று லோகங்களும் பிரகாசிக்கும் தமரிடாத முழுரத்தின மணிபோன்ற இராஜரே, நானிந்தப் பெரியபூமியி னிடத்தில் எழுதப்பட்டு வழங்கும் எழுத்துகளில் ஓர்வித எழுத்தையேனும் அறியேன். இன்னும், ஒப்பிட்டுச் சொல்ல அரிதான அல்லாகுத்த ஆலாவுடைய வேதமென்பதையும் ஓதினவனல்லவென்று சொன்னார்கள். அப்போது, அழகான நிறம்பொருந்திய சிறகுகளின் விரிவைச் சுருக்கிக்கொண்டு, மானிடவடிவாய் வந்திருக்கும், ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம் அல்லாகுத்த ஆலா சொன்ன முறைவழியாக, முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் கிட்டநெருங்கி முகத்திற்கு முன்னிருந்துகொண்டு, தம்மிருகைகளையும் பொருத்தி இறுக்கமாக நபிநாயகத்தைக் கட்டித் தழுவிப், பின்னர், வேதத்தை யோதுமென்று சொல்ல, அதுகேட்டு, இராஜ நாயகராகிய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள், ஜிபுரீல் அலைகிஸ்ஸலாத்தைப் பார்த்து, வேதத்தில் முதலிலேவருஞ் சொல்லாவது, என்னுடைய நாவில் வழக்கப் படுத்தினவ னல்லவேயென்று சொன்னார்கள்.

இச்சொற்கேட்ட, ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம், நபிநாயக மவர்களுக்கு எதிராலே யிருந்து மறுபடியும், அவர்களுடல் வருத்தமுண்டாகக் கட்டித்தழுவி முகத்தை நன்று யுற்றுப்பார்த்துச், சந்திரனிலும் அதிகமாக இலங்கும் பிரகாசத்தையுடைய முகம்மதே வேதத்தை யோதுமென்று சொல்ல, அதுகேட்டு நபிநாயகம், ஜிபுரீல் அலைகிஸ்ஸலாத்தைப் பார்த்து, அற்புதத்திற் பெரிதான பேறே, இந்தப் பூமியினிடத்தில் அரிதான வேதத்தை யொருவரால் ஏவப்பெற்றேனும், கண்டேனும், கேட்டேனும் படித்து நானறிந்தவனல்லவே யென்று சொன்னார்கள். இச்சொற் கேட்டு, வானவர்கட் கிராஜராகிய ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம், மறுபடியும், நபிநாயகத்தின் அழகிய பிரகாசவொளியுற்றிலங்கும் இரண்டுதோளும் நெருங்கக் கைகளைப பூட்டி, அவர்கள் மனத்தில் அச்சமுண்